பக்கங்கள்-16 | 24.மார்ச்.2023 | விலை-50.00




# தினப்புயல்

THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 426



## தனது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள புலம்பெயர் அமைப்புகளை நாடும் ரணில் – சுரேஸ்



## அரசால் திட்டமிட்டு சுட்டுக்கொல்லப்பட்ட ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவுநாள்



## தமிழர் விடுதலைப் போராட்டம் ஜெனிவா வரை கொண்டு செல்லப்பட்டதன் காரணம் என்ன?

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# தனது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள புலம்பெயர் அமைப்புகளை நாடும் ரணில் - சுரேஸ் பிரேமச்சந்திரன்



இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் இன்னமும் இருந்துகொண்டு தான் இருக்கிறது. அரசாங்கம் சீனாவிடமும், இந்தியாவிடமும் இருந்து பெருந் தொகையான கடன்களைப் பெற்றிருக்கிறார்கள்.

குறிப்பாக இந்து சமுத்திரத்தில் இலங்கை போன்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடு சீனாவுக்குத் தேவையாக இருக்கிறது. ஆகவே சீனா இலங்கையைப் பெருமளவில் பயன்படுத்திக் கொள்வது என்கிற நிலைப்பாட்டினை யுத்த காலத்திலிருந்தே ஆரம்பித்துவிட்டது. இலங்கைக்கு பெருமளவிலான யுத்த உபகரணங்கள் அதாவது ஆயுத தளபாடங்கள், டாங்கிகள் போன்ற பல்வேறான உதவிகளை வழங்கி, இலங்கையை தனக்குக் கடனாளியாக்குகின்ற வேலைகள் அப்போதிருந்தே ஆரம்பிக் கப்பட்டுவிட்டது.

யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையின் அபிவிருத்தி என்கிற பெயரில் தேவையற்ற உதவிகள் உதாரணமாக, ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் தேவையில்லாத ஓர் ஏற்பாடு. மத்தல விமான நிலையம் தேவையில்லாத ஏற்பாடு. இவற்றுக்குக் கிடைத்த பணம் என்பது பல மில்லியன் டொலர்கள். இவ்வாறானவற்றை இலங்கைக்குள் கொண்டுவந்து இந்த விடயங்களை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது மட்டுமல்லாமல் இலங்கையும் தான் கூறியதைச் செய்கின்ற ஒரு நாடாக மாற்றிக் கொண்டது சீனா.

ஆகவே இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது ஆளுமையை, செல்வாக்கினை வைத்துக்கொள்ள வேண்டும் என்பது அமெரிக்காவைப் போல வளர்ந்திருக்கக்கூடிய சீனா தனது வல்லாதிக்க சக்தியை உலக அளவில் நிறுவவேண்டும். அதற்கு இந்தியா போன்ற பிராந்திய வல்லரசுகள் தடையாக இருக்கக்கூடாது.

எனவே இந்தியாவிற்கு மிக நெருக்கமாக இருக்கக்கூடிய இலங்கை, மாலைதீவு போன்ற நாடுகளை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

மாலைதீவில் தற்போது சீனாவுக்கு ஆதரவானவர் ஜனாதிபதி யாக்கப்பட்டுள்ளார். இதேபோல கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ போன்ற ஜனாதிபதிகள் சீனாவுக்கு சார்பானவர்களாக சீனாவால் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறான நடவடிக்கைகள் என்பது இந்து சமுத்திர பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை சீனா சிதறடிக்கின்றது, தனது பாதுகாப்புக்கு சீனா குந்தகம் விளைவிக்கின்றது என்ற சூழ்நிலை சீனாவால் இந்தியாவுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக்குள் இருக்கின்ற இலங்கை போன்ற நாடுகள், இந்தியாவின் பாதுகாப்பை கவனத்தில் எடுக்காமல் செய்கின்ற நடவடிக்கைகள் என்பது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சிறு சிறு மோதல்களை உருவாக்கும். ஏற்கனவே உருவாக்கியிருந்தது.

தற்போது இலங்கைக்கு கூடுதலான உதவிகளைக் கொடுத்து தனது பக்கம் வைத்திருக்க இந்தியா விரும்பினாலும் கூட, இலங்கை அந்த விடயங்களில் ரணில் விக்ரம சிங்கவாக இருக்கலாம் அல்லது ஏனையவர்களாக இருக்கலாம், இந்தியா அமெரிக்காவினுடைய பார்வையில் இருந்து தப்பிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இந்த நிலையில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை நாங்கள் பார்ப்போமானால், அடுத்து வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதற்கப்பால், மக்களது வாக்குகள் என்கின்ற விடயங்களையும் கடந்து, வேறு வேறு நாடுகளின் அனுசரணை மற்றும் தங்களது தேவைகளை யார் பூர்த்தி செய்வார்கள் என்கிற விடயங்களும் உள்ளடங்கியிருக்கிறது.

ஆகவே அடுத்து வரப்போகிற ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க அவர்கள் வெற்றி பெறுவதற்கு புலம்பெயர் அமைப்புக்களை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது, சர்வதேச சமூகத்திடம் நான் தமிழ்த் தரப்புக்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன், தமிழ் - சிங்கள மக்களிடையே நல்லிணக்கத்தை உருவாக்க பௌத்த பிக்குகளுடன் வேலை செய்துகொண்டிருக்கிறோம் என்கிற விடயங்களை சர்வதேச ரீதியில் கொண்டுசெல்வதற்கும் தனக்கு எதிராக வரக்கூடிய விடயங்களையும் கவனத்திற்கொண்டு செயற்படு கிறவராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அண்மைய செயற்பாடுகள் அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

உள்நாட்டு விடயங்களைப் பார்த்தால் அண்மையில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சந்திப்பொன்றை ரணில் விக்ரமசிங்க அவர்கள் ஏற்படுத்தியிருந்தார். அதில் பல உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. நடந்த சந்திப்பிலும் கூட மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரை விவகாரம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல் போன்ற பல விடயங்களை தான் செய்வதாகக் கூறியதாக ஊடகங்கள் வாயிலாக அறிய முடிந்தது. 13வது திருத்தச்சட்டத்தைப் பொறுத்தவரை அடுத்த பாராளுமன்றங்களில் புதிய அரசியலமைப்பினைக் கொணர்ந்து அதாவது 2026ஆம் ஆண்டளவில் அமுல்படுத்தவுள்ளதாக அவரது பேச்சுக்களில் இருந்து அறிய முடிகின்றது.

அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவது என்பது அவரது நிகழ்ச்சி நிரலின் முதலாவது விடயம். இரண்டாவது விடயம் சீனா போன்ற சர்வதேச நாடுகளிடமிருந்து கடன்களைப் பெற்றுக்கொண்டு இலங்கையை கடன் சுமையிலிருந்து மீட்டெடுப்பது. தமிழ்த் தரப்பின் விடயங்களைப் பொறுத்தவரையில் அவரது நிகழ்ச்சி நிரலில் தற்போதைக்கு இருக்கிறதா என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது. சீனாவை ஓரங்கட்ட முடியாது என்கிற அளவில் சீனா இலங்கையில் கால்பதித்திருக்கிறது என்பதும் சீனாவுக்கு மிகப் பெரிய அளவிலான கடன்களை மீள வழங்கவேண்டிய நிலை இருப்பது மாத்திரமல்லாமல், சீனா தொடர்ந்தும் கடன்களை வழங்கக்கூடிய நிலையில் தயாராக இருக்கின்ற போக்கினையும் நாங்கள் காணக்கூடியதாகவிருக்கிறது.

அந்த வகையில் பார்த்தால் இலங்கை என்பது அமெரிக்க சீன இந்திய நலன்கள் மற்றும் இவர்களின் கடன் பொறிக்குள் சிக்கியிருக்கிறது என்பதுதான் இன்றைய நிலைப்பாடு.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டணியில் இருக்கக்கூடிய தமிழ்க் கட்சிகள் தற்போதைய ஜனாதிபதியோ அல்லது இதற்கு முன்பு இருந்தவர்களோ தமிழ் மக்களின் தேசியஇனப்பிரச்சினைக்கானசரியான தீர்வுகளை முன்வைக்கவில்லை என்பதோடு, உள்ள ஜனாதிபதிகள் மீது நம்பிக்கையில்லை என்பதை வெளிப்படுத்தும் முகமாகவும், தமிழ்த் தரப்பாகிய நாங்கள் பொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கவேண்டும் என்கிற முடிவை எடுத்திருந்தோம். இதுகுறித்து தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவிடம் கேட்டிருந்தபோதும் இதுவரையில் அவர்கள் ஆக்கபூர்வமான எந்தவிதமான பதிலையும் வழங்கவில்லை.

இந்த விடயத்தில் ஒட்டு மொத்தமாக தமிழர் தரப்பும் ஒரே அணியாக நின்று நாங்கள் பொது வேட்பாளரை நிறுத்தப்போகிறோம் என்று கூறினால், அது சிங்களத் தரப்பின் வேட்பாளருக்கு பாரிய பிரச்சினையாக இருக்கும். ஆகவே தமிழர் தரப்பு இவ்விடயம் தொடர்பில் திட்டவட்டமான எந்தவித முடிவுக்கும் இன்னமும் வரவில்லை என்கிற சூழல் தான் இருக்கிறது. இதற்கு தமிழ் மக்களும் ஆதரவளிக்கின்றபோது பாரிய தாக்கத்தை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாம் ஏற்படுத்தலாம். அந்த சந்தர்ப்பத்தில் தெற்கின் ஜனாதிபதி வேட்பாளர் எங்களை அணுகவேண்டிய நிலையும் ஏற்படும். அந்த ரீதியில் எமது செயற்பாடுகளை நாம் அமைத்துக்கொள்ள எமது காய்களை நகர்த்தவேண்டும் என்பது தான் எனது வேண்டுகோள்.

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## தேசபந்து தென்னகோனின் அதிரடியும், போதைப்பொருளும்

இலங்கையில் கடந்தவாரம் மிக உன்னதமான நடவடிக்கையொன்று பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எமது நாட்டின் கல்விச் சமூகத்தையும் இளம் சமுதாயத்தையும் போதைப்பொருள் பாவனையில் இருந்து காப்பாற்றும் முயற்சியாக ஓர் அதிரடிச் சுற்றிவளைப்பு நாடளாவிய ரீதியில் இடம்பெற்றது. இதற்கு "யுக்திய" நடவடிக்கை என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இச் சுற்றிவளைப்புகளில் பல மில்லியன் கணக்கான சகல வகையான போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டதுடன் பல இலட்சம் பெறுமதியான வீடுகள் மற்றும் வாகனங்கள் கைப்பற்றப்பட்டது. இப்போதைப்பொருள் வியாபாரத்தின் முக்கிய சூத்திரதாரிகள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையில் பொலிசார், இராணுவத்தினர், புலனாய்வுத் துறையினர் மற்றும் கடற்படையினர், விசேட அதிரடிப் படையினர் என அரச பாதுகாப்பு இயந்திரத்தின் முழுக் கட்டமைப்பும் களமிறக்கப்பட்டுள்ளது.

இம் முயற்சியானது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். எமது நாட்டின் இளம் சமுதாயம் போதை என்னும் மார்க்கத்துக்குள் மூழ்கி பல கலாச்சார சீர்கேடுகள், வன்முறைகள், குடும்ப வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், கொலைகள், கடத்தல்கள் என பல வடிவங்களில் விஸ்வரூபம் எடுத்திருந்தது. அத்துடன் பல இளைஞர், யுவதிகள் போதைப்பொருள் பாவனையால் மிக இளம் வயதில் திடீர் மரணங்களைச் சந்தித்து வருவதைக் காணக்கூடியதாகவிருக்கிறது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான இளம் யுவதிகள் போதைப்பொருள் வாங்குவதற்காக பாலியல் ரீதியான துர்நடத்தைகளுக்கு உள்ளாகிவந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் இவ் அதிரடி சுற்றிவளைப்பானது இக்கால நேரத்தில் மிகவும் அவசியமானதும் அத்தியாவசியமானதாகவும் உணரப் படுகிறது. இங்கு ஒரு கேள்வியை மக்கள் முன்வைக்கிறார்கள். கடந்த 24 மணித்தியாலத்தில் பல ஆயிரக்கணக்கான போதைப்பொருள் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யபட்ட நிலையில் பல கோடிக்கணக்கான பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. இதனை ஏன் இவ்வளவு காலமும் அரச தரப்பு செய்யவில்லை என்கிற கேள்வியும் எழுகின்றது.

இதற்குப் பின்னால் எதுவும் அரசியல் காரணங்கள் உள்ளதா என மக்கள் அங்கலாய்க்கின்றனர். வரும் வருடம் தேர்தல் இடம்பெறவுள்ளதால் வாக்கு வங்கியை நிரப்ப இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அல்லது வருட இறுதியில் இடம்பெறும் நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறதா?, இந் நடவடிக்கை தொடர்ந்து இடமபெறுமா?, கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் வெளிவருவார்களா?, மீண்டும் போதைப்பொருள் வியாபாரம் தொடருமா? போன்ற பல கேள்விகள் மக்கள் மனதில் இருந்து வெளிப்படுகின்றன.

உண்மையில் இதய சுத்தியுடன் எமது நாட்டிலிருந்து போதைப்பொருளை முற்றாக அகற்ற இவ்வரசு தொடர் நடவடிக்கை எடுத்தால் அது ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் ஆறுதலைக் கொடுக்கும். அத்துடன் எமது இளம் சமுதாயத்தை இக்கோரப்பிடியிலிருந்தும் காப்பாற்ற முடியும். அரசின் இந்நடவடிக்கை தொடருமா?

# கல்லறைப் பூக்கள்



**பல்துறை எழுத்தாளர்**
**புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்**

25

"செல்வமலர் யார்? வாங்கோ. என்ன பிரச்சினை?"

கட்டழகு குலையாத உடலமைப்பையும் தூய நீரால் நிரம்பிப்போன வட்டக்குளக்கண்களும் செல்வமலரைப் பார்த்த ஆடவர்களுக்கு ஒரு நொடிப் பொழுது உடலில் மின்சாரம் பாயும்.

ஏன், பெண்களே அவளின் சோபை தங்களுக்கு இல்லை என்று பொறாமை கொள்வார்கள் என்றால், பாருங்களேன். திருக்கோணமலையில் அழகுக்கு ஓவியம் என பெயர் போனவள். முப்பது வயதில் இப்படியென்றல், பள்ளி படிக்கும் பருவத்தில் ஆண்கள் கூட்டத்தையே காந்தம் இழுப்பதைப்போல இழுத்து இருப்பாள்.

விக்கியை - அதுவும் பிரிவினை வாதிகளுக்குத் தமிழ்ப் பிரிவில் உளவாளியாக செயற்பட்டவனை - என்று காதலித்து திருமணம் செய்து கொண்டாளோ, அன்றே அவளின் சுதந்திரம் எல்லாப் பக்கங்களிலும் பறிபோனது.

ஒட்டுமொத்த அழகையும் ஒரு கணம் எல்லோரையும் பரிதாபப்பட வைத்தது, அவள் கரங்களால் அணைக்கப்பட்டு, இடுப்பில் குரங்குக் குட்டிப் போல தாவிப் பிடித்துக் கொண்டிருக்கும் பால் குடி மறவாத ஒரு வயது மதிக்கத்தக்க பச்சைப் பாலகன்.

திருகோணமலை 'ஆபருக்கு' குண்டுத் தாக்குதலுக்குத் திட்டமிட்டான் என்ற பெயரில், பயங்கரவாதத் தடைச்சட்டம் விக்கியின் மீது பாய்ந்தது. செல்வமலர், தனது கணவர் உயிருடன் இருக்கின்றாரா, இல்லையா? என்று கூட தெரியாமல் முன்பு வயிற்றில் கருவுடன் தேடித் திரிந்தாள். இப்போது வயிற்றுக்காகவும் தன்னுடைய பிள்ளைக்கு அப்பாவை அடையாளம் காட்டவும் தேடித்திரிகின்றாள்.

"என்ர கணவரை 'டவுன்ல' வைச்சு ஆமிக்காரர் பிடிச்சுக்கொண்டு போனவங்கள். நானும் பல இடங்களில் தேடி எங்கையும் இல்லை"

பொறுப்பாளர் கையில் குழந்தையுடன், முன்னால் நின்ற செல்வமலரை நமிர்ந்து பார்க்கின்றார். "அட தங்கச்சி செல்வமலரா?" - ஒரு வருடத்திற்கு முன்னர் அவளைக் கண்ட ஞாபகம் வந்தது.

"ஆமாம் அண்ணன். மறக்காம ஞாபகம் வைச்சிருக்கீங்க."

"எங்கட அமைச்சருக்கிட்ட சொல்லி, உங்கட பிரச்சினை தொடர்பாக கதைக்கச் சொல்லுறன். கடிதம் ஒன்று எழுதித் தந்துட்டுப்போங்க." - பக்கத்தில் நின்ற ஐயாவை அழைத்து, "இந்த பிள்ளைக்குச் சாமான் பொதியொன்று கொடுத்து அனுப்புங்கோ" என்றார். (பொதி இரண்டாயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொருட்களைக் குறிக்கும்)

செல்வமலர் கடிதம் எழுதி எழுதி மறுத்துப் போன, இடக்கையின் கட்டை விரலாலும் ஆட்காட்டி விரலாலும் தன்னிடம் உள்ள பேனையால் வேண்டா வெறுப்பாக கடிதம் எழுதுகின்றாள். புதிதாக வாங்கிய பேனையில் கணவனைத் தேடி கடிதம் எழுதியது மட்டுமே. இரண்டு வாரங்கள் கூட ஆகவில்லை. பேனை எழுதிக் கொண்டு போன அளவில் மை தீர்ந்து பாதியில் நின்றது. பேனையை உதறியவாறு நிமிர்ந்து பார்க்கின்றாள். முன்னால் சற்று தொலைவில் சாத்தின் சட்டப் பையில் பேனை ஒன்று காட்சியளிப்பதைக் கண்டு விட்டாள்' அவனும் அவள் பேனை எழுதாமல் தடுமாறுவதை உகித்து விட்டான். அவளுக்கு உதவி செய்யும் நோக்குடன் நகர்ந்த சாத்திடம் "தம்பி அந்த பேனையை ஒருக்க தாங்கோ. கடதாசி ஒன்று எழுதிப் போட்டுத் தாறன்." - கேட்க வாயைத் திறக்கும் முன்பே பேனை கை மாறியது.

முக்கியமான பிரச்சினைக்காரர்களை சந்திக்கும் நேரம் நிறைவுக்கு வந்தது. ஒரு சிலர் இன் முகத்துடனும் பலர் கவலை தோய்ந்த முகத்துடனும் அலுவலகத்தை விட்டு வெளி நடப்பு செய்தனர்.

சாத் வேகமாக பொறுப்பாளர் அருகே ஓடினான். அவன் கப்பல் 'டிக்கட்டை' விரைவாகவும் இலவசமாகவும் எடுத்துத் தருமாறு கெஞ்சினான்.

அவனது விண்ணப்பப்படிவத்தைப் பார்த்து, "தம்பி நீங்க கச்சேரியில் போய் எடுங்க. உங்களுக்கு கெதியில் தருவாங்கள்" - பொறுப்பாளர்.

"இல்லை காசு பிரச்சினை!?"
"இப்படி எல்லாம் காசு இல்லாமல் 'டிக்கட்' எடுத்தா, அரசாங்கம் என்னத்திலை ஓடுறது? போங்க.. போங்க.." - தனது 'போக்கேட் மணியைக்' கொடுப்பது போல வார்த்தைகளை அள்ளி வீசி விட்டு ஆசனத்தை விட்டு எழ முற்பட்டபோது, சாத் வவுனியா அலுவலகத்தில் வாங்கிய கடிதத்தை நீட்டினான். அழகிய சங்கீத சாதனம், பொறுப்பாளரின் பார்வையில் பட்டதும், சாத்தை வெளியில் பிடித்துத் தள்ள முற்பட்ட மெய்ப் பாதுகாவலர்களைத் தடுத்து, அந்த கடிதத்தை வாங்கி பார்வையைச் செலுத்தினார்.

சிறிது சிந்தித்து விட்டு, தொலைபேசி அழைப்பை வவுனியா கட்சி அலுவலகத்திற்கு ஏற்படுத்தினார். சில விநாடிகள் உரையாடிவிட்டு, அங்குள்ள பொறுப்பாளர் என்னத்தைக் கதைத்தாரோ தெரியவில்லை திடீரென்று " 'கெம்மஸ்' பொடியளை நாங்க நம்புறது இல்லை. இருந்தாலும் ஒரு கடிதத்தைத் தந்துட்டுப் போ நாங்க பெயர் விபரத்தைக் கச்சேரிக்கு அனுப்புறம். உன்னைப் பார்க்க பாவம வேற இருக்கு" - எழுந்து சென்று விட்டார்.

சாத் படிப்பதையே இலக்காகக் கொண்டு எந்த வேலையையும் நோக்கியமையால், கடிதத்தை எழுதிக் கொடுப்பதில் அவனுக்குச் சிக்கல் தோன்றவில்லை.



"தம்பி இஞ்ச எடுக்க முடியாது. 'டிக்கட்டுக்கு' எடுக்க பண வசதியில்லாதவர்களுக்காக, நாங்கள் கச்சேரிக்குப் பணம் செலுத்துவோம். உங்கட பெயரை அங்க அனுப்புவம். நீங்கள் அங்க போய் 'பிரியா டிக்கட்ட' எடுக்க வேண்டியதுதான்."
"இவ்வளவு பேரும் இலவச 'டிக்கட்' எடுக்கவா?"
"தம்பி, வந்த முதல் 'வள வள' என கதைத்துக் கொண்டிருக்கிறாய். அது வேற வேற தேவைகளுக்கும் வந்திருக்காங்க. நீ, சத்தம் போடாம 'போம்' நிரப்பு. அடுத்த ஆள் வந்துட்டு, இண்டைக்கு மக்கள் சந்திப்பு புதன் என்பதால், சனம் கூட, கெதியா நிரப்பித் தா?" - ஒற்றைக் காலில் 'சுடுது மடியைப் பிடி' - நின்றார்.

சாத், விண்ணப்பப்படிவத்தை, பணமில்லாம 'டிக்கட்' எடுக்கலாம் என்ற அவாவில் நிரப்பி, முதியவரின் கரங்களில் திணித்தான். விண்ணப்பப் படிவத்தில் நிரப்பப்பட்ட - தரப்பட்ட தகவல்களைப் பார்த்தவாறு மெதுவாக வாசலில் வந்து நின்ற புதிய நபரை நோக்கி நகர்ந்தார்.

தன்னுடைய நேர்த்தியான ஊதிய கொடுப்பனவு இன்றிய இந்த காரியாலய வேளையில் இணைந்து, இருபது வருடங்களைக் கடந்தவர். வெற்றிலை போட்டு காவி படிந்த சீரற்ற பற்கள், தலையில் தும்பு முட்டாசைப் போல அடர்த்தியான வெள்ளை முடிக் காடு, வெற்றிலை எச்சில் ஊற்றி காய்ந்து போன சிவப்பு நிறத் தாடி - இத்தனையும் ஒருங்கிணைக்கப்பட்ட அந்த முதியவர் அனுபவத்தின் முதிர்வாக காட்சியளித்தார். இயக்கங்கள் - மக்கள் பெறவேண்டிய நீதியின் உறைவிடம். இங்கு முதியவரே சுரண்டப்படுகின்றார். சாத்தைப் போல பல பிரச்சினைகளில் நபர்கள் பலர் வருவார்கள். எல்லோரையும் சமளிக்க வேண்டும் என்பது மேலிடத்தின் கட்டளை.

திடீரென்று அலுவலகத்தில் நிசப்தம் நிலவியது' எல்லோரும் எழுந்து நின்றனர்' முதியவர் மட்டும் கையில் ஒரு பெரிய கட்டு விண்ணப்பப் படிவங்களுடன், "பொறுப்பாளர் வருகிறார். இண்டைக்கு மூதூர் 'ஒப்பிஸ்'க்கும் போக வேணுமாம். பேர் கூப்பிடுற ஆக்கள் கெதியா முன்னுக்கு வாங்கோ" - மக்கள் கூட்டத்தின் முன்னால், வெள்ளைத் துணி விரித்து பூச்சாடியொன்று வைக்கப்பட்ட மேசையில் கட்டு விண்ணப்பப் படிவங்களை வைத்துவிட்டு ஒரு மூலையில் கரங்களைக் கட்டிக் கொண்டு கும்பிடு போடுபவர் போல நின்றார்.

கணப்பொழுதில் முன் ஆசனங்களில் பொறுப்பாளரும் கறுப்பு நிற நீளக் காட்சட்டையும் வெள்ளை நிற மேல் அங்கியும் அணிந்த இரண்டு மெய்ப் பாதுகாவலர்கள் தோன்றினார்கள். ஒவ்வொரு விண்ணப்பப் படிவங்களையும் பார்த்து, இராணுவத்தினரால், பிரச்சினை உள்ளவர்களை முதலில் அழைத்தார்.

தொடரும்...

# தமிழர் விடுதலைப் போராட்டம் ஜெனிவா வரை கொண்டு செல்லப்பட்டதன் காரணம் என்ன?

இலங்கையின் வடக்கில் உள்ள கடற்கரை நகரான வல்வெட்டித்துறையில் திருவேங்கடம் வேலுப்பிள்ளைக்கும், பார்வதிக்கும் கடைசி மகனாக பிரபாகரன், 1954 நவம்பர் 26ல் பிறந்தார். வேலுப்பிள்ளை இலங்கை அரசில் பணிபுரிந்தவர். பிரபாகரனுக்கு அண்ணனும், இரண்டு அக்காவும் இருக்கின்றனர். ஊரிக்காடு எனும் இடத்தில் சிதம்பரா கல்லூரியில் 10ம் வகுப்பு வரை பிரபாகரன் கல்வி கற்றார். 1958ம் ஆண்டில் தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்கள் நடத்திய கலவரம், 4 வயது சிறுவனாக இருந்த பிரபாகரன் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது.

மாணவராக இருந்தபோதே பிரபாகரன் தமிழ் ஆதரவாளர்கள் குழுவில் இருந்தார். தன் பள்ளித் தோழர்களுடன் சேர்ந்து கைக்குண்டுகளை தயாரிக்கப் பழகினார். ஒருமுறை குண்டு வெடித்து அவரது காலில் தழும்பை ஏற்படுத்தியது. ஒருமுறை அதிகாலை மூன்று மணிக்கு பிரபாகரனை தேடி பொலீஸார் அவரது வீட்டுக்கு வந்தனர். அப்போதுதான் தங்களது மகன் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறான் என்ற உண்மை பெற்றோருக்கு புரிந்தது. கதவு தட்டுவதை வைத்து பொலீஸார்தான் தன்னை தேடுகின்றனர் என்பதை உணர்ந்து கொண்ட பிரபாகரன் தப்பிவிட்டார்.

பிரபாகரனை தேடி சென்று கண்டுபிடித்து வீட்டுக்கு அழைத்து வந்தார் அவரது தந்தை. அப்போது தன் நிலைமையை அவரிடம் பிரபாகரன் கூறிய போது, 'உங்களுக்கோ, குடும்பத்துக்கோ நான் பயன்படமாட்டேன். என்னால் உங்களுக்கு எந்த தொல்லையும் வேண்டாம். என்போக்கில் விட்டு விடுங்கள். என்னை எதிர்பார்க்காதீர்கள்' என்று கூறி வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார். அதன் பின் வீடு திரும்பவேயில்லை. கடந்த 1970களில் தமிழர்களுக்கு எதிராக ஏவிவிட்ட கடுமையான அணுகுமுறையும், கல்வித்துறையில் புறக்கணிப்பு உள்ளிட்டவை தமிழ் இளைஞர்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்புணர்வை உருவாக்கியிருந்தது.

பாராளுமன்றில் தமிழ்த்தலைவர்களின் போராட்டங்களுக்கு இலங்கை அரசு செவிசாய்க்கவில்லை. எனவே, தமிழ் பகுதியில் 1970ல் தமிழ் மாணவர் பேரவை துவங்கப்பட்டது. வல்வெட்டித்துறையை சேர்ந்த பிரபாகரனும், நண்பர்களும், உறவினர்களுமே அதில் முக்கிய பங்கு வகித்தனர். இக்குழு மாணவர்கள் மத்தியில் செல்வாக்கு பெறத் தொடங்கியது. அக்குழுவிலேயே மிக இளையவராக இருந்ததால் அவரை 'தம்பி' என்றே எல்லோரும் அழைத்தனர். சிங்கள எதிர்ப்பை காட்டும் விதமாக பஸ்சை எரிப்பது என்று முடிவு செய்தனர். அதன்படி 16 வயதாக இருந்த பிரபாகரன், பஸ்சை எரித்து தனது போராட்டத்தை துவக்கினார்.

மாணவர் பேரவையில் இருந்தவர்களை, சிங்கள பொலீஸார் கைது செய்து கொழும்பில் சித்திரவதை செய்தனர். இச்சூழ்நிலையில் பிரபாகரன் தமிழகம் வந்தார். பின் 1972ல் இலங்கை திரும்பிய அவர், 'புதிய தமிழ்ப் புலிகள்' என்ற பெயரில் ஓர் இயக்கத்தை துவக்கினார். ஆயுதம் ஏந்துவதன் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று அவர் தீர்மானமாக இருந்தார். 1974ம் ஆண்டில் யாழ்ப்பாண நகரில் தமிழ் ஆதரவு மாநாடு நடந்தது. இம்மாநாட்டில் துப்பாக்கிச் சூடு நடந்ததில் ஒன்பது பேர் பலியாகினர். இச்சம்பவத்துக்கு பழி தீர்க்கும் விதமாக, 1975ல் பொன்னாலை எனும் இடத்தில் கோவிலுக்கு சென்று கொண்டிருந்த, யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொலை செய்யப்பட்டார். துரையப்பா, இலங்கை சுதந்திரக்கட்சியை சேர்ந்தவர், தமிழ் இன உணர்வை நசுக்கும் நோக்கத்தை கொண்டிருந்தவர். இச்சம்பவத்தை முன்னின்று நடத்தியவர் பிரபாகரன். இதுதான் பிரபாகரனின் முதல் கொலை நடவடிக்கை.

கடந்த, 1976 மே 5ம் நாள் தமிழ் புதிய புலிகள் இயக்கத்தை தமிழ் ஈழ விடுதலைப்புலிகளாக, புதிய இயக்கமாக பிரபாகரன் நிறுவினார். இலங்கை உளவுப் படையினரை அழித்தல், பொலீஸ் நிர்வாகத்தை சீர்குலைத்தல், இராணுவத்தினர் மீது நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்குதல் நடத்துதல் ஆகிய மூன்று அம்சங்களை புலிகளின் பணிகளாக அப்போது அறிவித்தார். கொரில்லா இயக்கமாக வெளிக் காட்டுவதற்காகவே, இயக்கத்தின் சின்னமாக புலியை தேர்வு செய்தார். புலிகள் இயக்கத்தை உருவாக்கியதால், இலங்கை இராணுவம் அவரை தேடத் தொடங்கியது. பொலீஸார் மீதும், இராணுவத்தினர் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தினர். 1978ல், 11 முக்கிய தாக்குதல் சம்பவங்களுக்கு தாங்கள்தான் பொறுப்பு என்று பிரபாகரன் அறிக்கை விட்டார். இதையடுத்து அந்த ஆண்டே விடுதலைப்புலிகள் தடை சட்டம் இலங்கை பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

அதே ஆண்டில், ஐக்கிய தேசிய கட்சியின் ஜெயவர்த்தன அரசு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கி, தமிழ் மொழியை இரண்டாம் பட்ச நிலைக்கு தள்ளியது. ஒருவரை எந்த விசாரணையும் இன்றி 18 மாதம் சிறையில் தள்ளும் சட்டத்தையும் 1979ல் இலங்கை அரசு நிறைவேற்றியது. இதனால், 1979-80ல் ஆயுத நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு, இயக்கத்தை பலப்படுத்தும் வேலையில் பிரபாகரன் ஈடுபட்டார். 1981ல் சிங்கள இராணுவமும், ஐக்கிய தேசிய கட்சியினரும் இணைந்து யாழ்ப்பாண நூலகத்தை எரித்தனர். தெற்காசியாவில் சிறந்ததாக கருதப்பட்டது இந்த நூலகம். 94 ஆயிரம் புத்தகங்கள் சாம்பலாகின.

கடந்த, 1981ல் யாழ்ப்பாண காங்கேசன் துறைமுகத்தில் இராணுவ வாகனத்தின் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதுவே இராணுவத்தினர் மீது புலியினர் நடத்திய முதல் தாக்குதல். 1982ல், அதிபர் ஜெயவர்த்தன தேர்தல் பிரசாரத்துக்கு வந்த போது, பொன்னாலைப் பகுதியில் கண்ணிவெடிகுண்டுகளை புதைத்து வைத்து தாக்குதல் நடத்தினர். கடந்த, 1983 உள்ளூராட்சி தேர்தலின் போது, நடத்திய தாக்குதல், இராணுவத்தினரை நிலைகுலையச்செய்தது. கண்ணி வெடித்தாக்குதலில் 13 இராணுவத்தினரை கொன்றது ஆகிய சம்பவங்களை பிரபாகரன் நேரில் நடத்தினார். இதுபோன்று பிரபாகரனின் தீவிர செயல்கள் தொடங்கின. இதையடுத்து கண்ட இடத்தில் போராளிகளை சுடவும், சுட்டுத்தள்ளிய பின் பிணங்களை பிரேத பரிசோதனை இன்றி புதைக்கவும் வழிசெய்யும் ஆணையை சிங்கள அரசு பிறப்பித்தது.

அப்பாவி தமிழர்கள் மீதான தாக்குதல்களை சிங்கள இராணுவம் அதிகரித்தது. கருப்பு ஜூலை என்று அழைக்கப்படும், 1983 ஜூலை 23ல், சிங்களவர்களால் 400 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 1983 ஜூலை, தமிழ் ஈழப்போரின் கொந்தளிப்பான காலகட்டம் என்று சொல்லலாம். இராணுவத்தினர் மீதான கொரில்லா தாக்குதலை பிரபாகரன் தொடங்கினார். அரசியல் மற்றும் இராணுவ அமைப்புகளையும் விரிவாக்கம் செய்தனர். கருப்பு ஜூலை கலவரத்தை கணக்கில் கொண்டு, அப்போது பிரதமர் இந்திரா, இலங்கை பிரச்சினையில் தலையிடுவது



என்று முடிவு செய்தார். இதற்கு அப்போது தமிழகத்தில் முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர் முயற்சி செய்தார். புலிகளுக்கு இராணுவ பயிற்சியும் ஆயுதமும் வழங்குவது என்று இந்தியா முடிவு செய்தது. இந்நேரத்தில், தமிழீழத்துக்குத் தேவையான ஆயுதங்களையும் வெளியிலிருந்தும் பிரபாகரன் பெற்றார். இதனால், இராணுவத்தினர் மீது கடுமையான தாக்குதலை புலிகள் நடத்தினர். இந்நேரத்தில் இலங்கை அரசு கலக்கம் அடைந்திருந்தது. தமிழ் ஈழ மக்கள் மகிழ்ச்சி அடைந்த நேரத்தில், 1984ம் ஆண்டில் இந்திரா படுகொலை செய்யப்பட்டார்.

அடுத்து பிரதமராகப் பதவியேற்ற ராஜிவுக்கும், பிரபாகரனுக்கும் இடையில் இணக்கமான சூழ்நிலை உருவாகவில்லை. இலங்கை அரசுக்குச் சாதகமாக ராஜிவ் செயற்படுவதாக பிரபாகரன் கருதினார். இதற்கிடையில், புங்குடுதீவைச் சேர்ந்த மதிவதனியை பிரபாகரன் 1984ம் ஆண்டு ஒக்.1ம் திகதி சென்னையை அடுத்த திருப்போரூர் முருகன் கோவிலில் திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதியினருக்கு இரு மகன்கள் சார்ல்ஸ் அன்ரனி, பாலச்சந்திரன் மற்றும் ஒரு மகள் துவாரகா பிறந்தனர். இவர்களில் சார்ல்ஸ் அன்ரனி போர் முனையில் மரணமடைந்துவிட்டார்.

கடந்த, 1985ம் ஆண்டில் இருதரப்பினருக்கும் போர்நிறுத்தம் ஏற்பட்டது. பூட்டான் தலைநகர் திம்புவில் இந்திய அரசின் முயற்சியில் தமிழ்க் குழுக்கள் மாநாடு நடந்தது. இங்கு புலிகள் முன்மொழிந்த தமிழர் தன்னாட்சி உரிமை தீர்மானத்தை இலங்கை அரசு ஏற்கவில்லை. பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. இதன்பின், திரிகோணமலை அருகே, இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தி, 200 பேரைக் கொன்றது. இந்தியாவிலிருந்து அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் வெளியேறினார். இதையடுத்து, இந்தியாவுக்கும், பிரபாகரனுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது.

கடந்த, 1986ம் ஆண்டில் தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் தகவல் தொடர்பு சாதனங்கள் பறிக்கப்பட்டன. அப்போது பிரபாகரன் தமிழகத்தில் தான் இருந்தார். பிரபாகரனின் உண்ணா விரதத்தைத் தொடர்ந்து அவை திருப்பியளிக்கப்பட்டன. 1987ம் ஆண்டில் அவர் ஈழம் திரும்பினார். அப்போது பேசிய அவர், 'தனி அரசை அமைக்க உயிர், உடல், ஆன்மாவை அர்ப்பணித்துப் போராடுவோம்' என்றார். கடந்த, 1987ம் ஆண்டில் டில்லியில் ராஜிவைச் சந்திக்கும் வழியில், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரையும் பிரபாகரன் சந்தித்தார். ராஜிவ் - ஜெயவர்தனா ஒப்பந்தம் பற்றி அப்போது அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. இது தனக்கு அதிர்ச்சி அளித்ததாக பிரபாகரன் கூறினார்.

மற்ற தமிழ்க்குழுக்கள் ஏற்றுக் கொண்டன என்று கூறி, அப்போது ராஜிவ் - ஜெயவர்தனா ஒப்பந்தம் நிறைவேறியது. இந்த ஒப்பந்தப்படி, ஆயுதங்களை புலிகள் இந்திய அரசிடம் ஒப்படைக்கவேண்டும். இலங்கை அவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கவேண்டும். இந்திய அமைதிப் படை இரு தரப்புக்கும் இடையில் மோதல் நடக்காமல் கண்காணிக்கும். இதுபற்றி பேசிய பிரபாகரன், 'மக்களது விடுதலைக்காக, விமோசனத்துக்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம். தமிழீழ மக்களின் ஒரே பாதுகாப்பு சாதனமாக இருந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எங்களிடமிருந்து பெற்றுக்கொள்வதிலிருந்து, தமிழ் ஈழ மக்களின் பாதுகாப்பை ஏற்றுக்கொள்கிறது. நாங்கள் ஆயுதங்களை அளிக்காவிட்டால் இந்திய இராணுவத்துடன் மோதும் நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை. தமிழ் ஈழ தனி அரசே நிரந்தரத் தீர்வைத் தரும்' என்றார். பலாலி இராணுவ முகாமில் இந்திய இராணுவத்திடம் ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டன. இந்திய - இலங்கை ஒப்பந்தத்திலிருந்த விஷயங்களை இலங்கை அரசு நிறைவேற்றக்கோரி திலீபன் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார். அவருடைய கொள்கை உறுதியால் உண்ணாவிரதத்திலேயே மரணமும் அடைந்தார்.

திலீபன் மரணத்துக்குப் பின், விடுதலைப்புலிகளை இலங்கைக் கடற்படை கைது செய்தது. 'இது ஒப்பந்த விதிகளுக்கு முரணானது' என்று கூறிய ஏழு புலிகள் சயனைட் குப்பிகளைச் சாப்பிட்டு மரணம் அடைந்தனர். புலிகளும் போர் நிறுத்தத்தைக் கைவிட்டனர். இந்திய அமைதிப்படைக்கு எதிராகப் புலிகள் போராடுவது குறித்து, தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருக்கு எழுதிய கடிதத்தில், 'இந்திய ராணுவம் புலிகளை ஒழிக்க வேண்டும் என்று நினைப்பதால் தான் எங்களது தற்காப்புக்காகப் போராடி வருகிறோம்' என்று பிரபாகரன் எழுதியிருந்தார்.

1987 மற்றும் 1988ம் ஆண்டுகளில், இடைக்கால அரசை தமிழ்ப்பகுதியில் ஏற்படுத்த வேண்டும் என்று ராஜிவுக்கு எழுதினார் பிரபாகரன். இந்த சமயத்தில் பெண்களையும் போராளிகளாக பிரபாகரன் அனுமதித்தார். பெண்புலிகளும் போர்க்களத்தில் ஈடுபட்டனர். தமிழ் ஈழத்துக்காகப் போரிட்டு உயிர் நீத்த மாவீரர்களை நினைவுகூறும் தினம் 1989ம் ஆண்டில் பிரபாகரனால் துவக்கப்பட்டது. இந்த சமயத்தில் அதிபராகப் பதவியேற்ற பிரேமதாசா புலிகளைச் சமாதானப் பேச்சுக்கு அழைப்பு விடுத்தார். இதனால், 1990ம் ஆண்டில் இந்திய அமைதிப்படை நாடு திரும்பியது. தமிழர்களுக்கு எதிராக இந்திய ராணுவம் நடந்து கொண்டது எனக்கூறி, அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி, ராணுவத்தினரை வரவேற்க விமான நிலையம் செல்லவில்லை. **தொடரும்...**

**நெற்றிப்பொறியன்**

# அரசினால் திட்டமிட்டு மட்டக்களப்பு தேவாலயத்திற்குள் சுட்டுக்கொல்லப்பட்ட ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவுநாள்

எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள். கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். தேசியப் போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரண மானதல்ல. அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். இலைமறை காயாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்குத் தோள் கொடுத்துவரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் மன உறுதி படைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்கவேண்டும் - தேசியத் தலைவரின் சிந்தனையில் இருந்து...

ஈழத் தமிழர்களின் மனிதவுரிமைக் காவலனாக சர்வதேச அரங்கில் மிகவும் துணிவுடன் ஓங்கி ஒலித்த குரல் மனித வாழ்வின் விடுதலைக்காக யேசுபிரான் பிறந்த நாளில் தமிழ் இன விடுதலைக்காக குரல் கொடுத்த ஒரு தமிழ் பிரதிநிதி, இறை வழிபாட்டுத் தலமொன்றில் இலங்கை அரச படைகளின் ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டார். இந்த தேசத்தில், ஜனநாயகத்திற்கும் மனித உரிமைக்கும் எத்தகைய இடம் உண்டு என எடுத்துரைக்கிறது.

தன் வாழ்வு துறந்து பிறர்க்கென வாழும் பெருந்தகைகளால் வாழும் இவ்வுலகென்பார்கள். எத்தனை அழிவுகளைச் சந்தித்தபோதும் இந்த மண் வாழ்கிறதென்றால் அமரர் ஜோசப் பரராஜசிங்கம் போன்ற மாமனிதர்களது தியாகத்தாலேதான் என்றால் மிகையாகாது. தன் நண்பர்களுக்காகத் தன் உயிரையும் தருபவனிடமுள்ளதை விடவும் மகத்தான அன்பு வேறெவரிடமும் இருக்க முடியாது. பைபிளின் மிகவும் அழகிய இந்த வாசகத்திற்கு மிகப் பொருத்தமான ஒரு மனிதர் மறைந்த திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள். அதனாற் தான் தேசியத்தலைவரால் மாமனிதர் என்ற விருதும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் 1934 ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 26 ஆம்நாள் இந்த மண்ணில் தோற்றம் பெற்றவர் ஜோசப் பரராஜசிங்கம். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் திருமணம் முடித்து மட்டு மண்ணில் நாடாளுமன்ற உறுப்பினராக வாழ்ந்ததுடன் வடக்கு கிழக்கிற்கு இணைப்பு பாலமாகவும் திகழ்ந்தார். 1952களில் தன்னுடைய 18 ஆவது அகவையில் தந்தைசெல்வாவின் அரசியல் பாசறையில் இணைந்துகொண்டார். கொள்கை கோட்பாடுகள் நிறைந்த இலட்சியம் கொண்டது தமிழ்த் தேசிய அரசியல். இது மலர்ப்படுக்கை அரசியல் அல்ல. மாறாக இது வோர் முட்படுக்கை அரசியலை முழுமனதோடு ஏற்றுக்கொண்டே நெருப்பாற்றைக் கடக்க முன்வந்தவர்.

தனிச் சிங்களமொழிச் சட்டத்தை எதிர்த்து 1956 ஆம் ஆண்டு தந்தை செல்வா தமிழ்த் தேசம் தழுவிய மிகப்பெரிய அறவழிப்போரை ஆரம்பித்தார். அன்றைய நாள் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் திருமண தினமாகவிருந்தபோதும் அந்த அறப்போரில் களமாடி மகிழ்ந்தாரென்றால் அவர் கொண்டிருந்த இனப்பற்றை என்னவென்று சொல்வது. ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் பாரிய சவால்களை இவ்வரசியல் வாழ்வில் எதிர்கொண்டார். 1972ஆம் ஆண்டு இலங்கையைக் குடியரசாக்கியது ஈழத்தமிழினத்தை அரசியல் அனாதையாக்கியது.

அரச ஊழியர். சினிமாத் துறை வாணிபத்தில் சிறப்புற்று விளங்கியவர்.

ஆரம்பத்தில் ஆங்கில ஆசிரியராக தமது சமூகப் பணியை ஆரம்பித்த இவர் அறுபதுகளில் தமிழரசுக் கட்சி மூலம் அரசியலுக்கு நுழைந்த இவர், தான் பத்திரிகையாளராக பணியாற்றிய காலத்தில் தனது மனைவியார் பெயரில் (திருமதி சுகுணம் ஜோசப்) கட்டுரைகளை எழுதிவந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவர இவர் எழுதிய கட்டுரைகள் பல அப்பகுதியில் மிகவும் பிரசித்தமானவை. ஒரு பத்திரிகையாளராக ஜோசப் பரராஜசிங்கம் செயற்பட்டவர்.

இலங்கை அரசுகளின் கிழக்கு மண் மீதான ஆக்கிரமிப்பு நெருக்கடிகளையும் மட்டக்களப்பின் வாழ்வையும் தன்னுடைய எழுத்துக்களின் மூலம் ஜோசப் பரராஜசிங்கம் வெளிப்படுத்தினார். எழுதுவதோடு விட்டுவிடாமல் கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் கண்டு அதன் தலைவராகப் பணிபுரிந்து இதழியல் சேவையின் உயர்வுகண்டவர்.

அறப்போர் தீவிரமடைந்தது. அறப்போரின் வெக்கை தாங்க முடியாது அப்போதிருந்த சிறிமாவோ அவர்களின் அரசாங்கத்தின் மட்டக்களப்பு அரசியல் அதிகாரி ஜோசப் பரராஜசிங்கம் அவர்களை நுவரெலியா மாவட்டத்திற்குத் தூக்கியெறிந்தார். ஆனால் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களோ அரசாங்கப் பதவியை உதறித் தள்ளி முழுநேர அரசியலுக்குள் காலூன்றினார். தமிழரசுக் கட்சி மூலம் அரசியலுக்கு நுழைந்த இவர். இருமுறை தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார். தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினராக இருந்த ஜோசப், தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் அங்கம் வகித்ததுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினராகவும் செயற்பட்டவர்.

1989இல் பல தமிழ் அமைப்புகள் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பட்டியலில் தேர்தலில் போட்டியிட்ட சமயம் இவரும் அந்தப் பட்டியலில் இடம்பெற்றார். ஆயினும் அப்போது அவர் அந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இருந்தபோதிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சாம் தம்பிமுத்து அவர்கள் கொழும்பில் கனடியத் தூதரகத்துக்கு முன்பாக வைத்து தனது மனைவியார் கலா தம்பிமுத்து சகிதம் சுட்டுக்கொல்லப்படவே, அந்த இடத்து நாடாளுமன்ற உறுப்பினராக ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

அதனை அடுத்து அவர் ஆற்றிய அளப்பரிய சேவையினால் 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் 48000 வாக்குகளுக்கு மேல் பெற்று மட்டக்களப்பின் முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதியாக அவரை மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். தொடர்ந்து தேர்தல்களில் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்தபோதிலும், வடக்கு கிழக்கில் ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகள் காரணமாக 2004 இலங்கை நாடாளுமன்றத் பொதுத் தேர்தலில் அவர் தோல்வியடைய நேர்ந்தது. ஆயினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் (தமிழரசுக்கட்சி) சார்பில் தேசியப்பட்டியல் மூலமான உறுப்பினராக அவர் நாடாளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்திரிகையாளர் அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதிலும் முன்னின்றவர். அந்த அமைப்பின் ஆரம்பத் தலைவரும் இவரே என்பதுடன் பல மொழியறிவில் தேர்ச்சி பெற்றவர் என்பதில் ஐயமில்லை.


மட்டக்களப்பில் 90ம் ஆண்டு இடம் பெற்ற பல தமிழ் மக்கள் மீதான படுகொலைகளையும், மனித உரிமை மீறல்களையும் சர்வதேசத்திற்கு கொண்டு சென்ற ஒரே ஒரு தலைவர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள். இது இவரின் சாணக்கிய அரசியலையும், மொழி பாண்டித்தியத்தையும் காட்டுகின்றது. குறிப்பாக படுவான்கரை பெருநிலத்தில் கடந்த 1991 ஜுன் 12ம் திகதி மகிழடித்தீவில் இடம்பெற்ற படுகொலையை சர்வதேச ரீதியாக வெளிக்காட்டியது மட்டுமன்றி அதற்கான ஒரு ஆணைக்குழுவை இலங்கை அரசாங்கத்தால் அமைப்பதற்கு அழுத்தம் கொடுத்தவரும் இவரே.

2004 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களை யெல்லாம் விடுதலைப் புலிகளிலிருந்து பிரிந்த கருணா அணியினர் தங்கள் பகுதிக்கு அழைத்தனர். "வடகிழக்கென்ற தமிழ்த்தேசிய அரசியல் இனி எமக்கு வேண்டாம். மட்டக்களப்பென்ற அளவோடு இனி அரசியல் அமைய வேண்டும்" என்று கட்டளை பிறப்பித்தார்கள். "இயக்கங்கள் உருவாகும் முன்பே தந்தை செல்வாவின் தலைமையையேற்று அரசியலுக்குள் வந்தவர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள். வடகிழக்கு என்ற தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து இம்மியளவும் என்னால் விலக முடியாது" என்று ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் பதிலுரைத்தார். அன்றிலிருந்து பாரிய கொலை அச்சுறுத்தல்களுக்கு ஆளானார். இதற்கெல்லாம் சற்றும் மசியாதவராகத் தேர்தலில் போட்டியிட்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதில் முன்னின்று உழைத்த ஜோசப் பரராஜசிங்கத்தை அன்றைய அரசு பலியெடுத்தது. தமிழ் தேசியத்தின் உண்மைக்குரலாக, தமிழ் மக்களின் விடுதலை உணர்வை, தெற்கிற்கும் உலகிற்கும் கூர்மையாக எடுத்துரைத்த பலர் அழிக்கப்பட்டனர். அப்படியான குரல்களில் ஒன்றே மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் குரல்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் 2005 மார்கழி 25 அன்று மட்டக்களப்பு செயின்ற் மேரி தேவாலயத்தில் நத்தார் தினத்தன்று இரவுத் திருப்பலிப் பூசையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்கள் என்ற போர்வையில் வந்த இலங்கை அரசின் துணைப்படையை சேர்ந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரின் மனைவியுட்பட மேலும் எழுவர் காயமடைந்தனர்.

மண்ணையும் மக்களையும் நேசித்த, குறிப்பாக ஆக்கிரமிப்பாளரின் கொடுமைகள் மிகுந்த தென்தமிழீழத்தின் வாழ்விலும் தாழ்விலும் பங்கெடுத்த ஒரு நல்ல ஆன்மாவின் துடிப்பு ஆயுதமுனையில் அடக்கப்பட்டிருக்கிறது. தேசத்தை நேசிப்பவர்களுக்கு மரணத்தைப் பரிசாகக் கொடுப்பது காலகாலமாக இங்கே நடந்துவருகின்றதெனினும் ஜோசப் பரராஜசிங்கத்தின் பலியெடுப்பிற்கு ஆக்கிரமிப்பாளர்கள் குறித்த நாள், மக்களின் ஈடேற்றத்திற்காகத் தன்னைச் சிலுவையில் ஒப்புக் கொடுத்ததாகச் சொல்லப்படும் யேசுபாலன் பிறந்த நாள்.



அன்றைய நெருக்கடியான சூழலில் ஆங்கிலப் புலமை வாய்ந்த ஜோசப் பரராஜசிங்கத்தின் குரலை நிறுத்துவது சம்பந்தப்பட்டவர்களுக்கு மிகமிக அவசியமானதொன்றாக இல்லாவிடின் கிறிஸ்துமஸ் தினத்தையும் புனித மரியாள் தேவாலயத்தையும் கொலைக்காகத் தேர்வு செய்திருக்கமாட்டார்கள். ஒரு பாராளுமன்ற ஜனநாயக வாதியாகவும், மனித உரிமைகள் வாதியாகவும் பார்க்கப்பட்ட ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக உலக நாடுகளோ, சர்வதேச அமைப்புகளோ நாம் அறிந்த வரையில் அனுதாபமோ கவலையோ வெளியிடவில்லை.

மக்கள் பிரதிநிதி ஒருவர், மக்களுக்காக ஜனநாயக ரீதியாக குரல் கொடுத்தமைக்காக அநியாயமாக பலி கொள்ளப்பட்டுள்ளார். இந்தக் கொடுஞ்செயலை செய்த குற்றவாளிகளை என்ன செய்வார்கள்? இலங்கை அரசாங்கத்தின் விசாரணைகள் நீதியை வழங்கவா? அல்லது சர்வதேச நெருக்கடிகளை தவிர்க்கவா என்பதை காலம் நிரூபிக்கும்.

ஜனநாயகப் பண்புகளுக்கமைய நாடாளுமன்றம் சென்று அடிவாங்கிய வரலாறு தமிழினத்திற்கு நிறையவே உண்டு. காலிமுகத்திடலில் அமைதியாகக் கூடிய சத்தியாக்கிரகிகள் மீது தடியடிப்பிரயோகம் செய்ததிலிருந்து மாமனிதர் குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டது வரை நடந்தேறிய அட்டூழியங்களையெல்லாம் மேற்குலகம் காணவில்லையா? ஜனநாயக ஆட்சியின் பண்புகளில் ஒன்றென மேற்குலகம் கூறும் கருத்துச் சுதந்திர உரிமை தமக்கும் உண்டென நம்பி உண்மைகளை வெளிக்கொணரப் பாடுபட்ட நடேசன், நிமலராஜன், மாமனிதர் சிவராம் போன்றோரின் படுகொலைகளை மேற்குலகம் அறியவில்லையா?.

குறிப்பாக தராக்கி சிவராம், குமார் பொன்னம்பலம் போன்றோர் மேற்குலகின் பார்வைப்பரப்புள் வரும் கொழும்பைத் தளமாகக் கொண்டது மேற்குலகின் மீது கொண்ட நம்பிக்கையாலல்லவா? அந்த நம்பிக்கை மீது மண்விழவில்லையா? இவை யாவற்றிலிருந்தும் புலப்படும் உண்மை: விடுதலை கோரிப் போராடும் இனம் தனிமைப்படுத்தப்படும். உலகின் அக்கறை கோரி அவர்கள் எழுப்பும் குரல் யாருமற்ற வனாந்தரத்தில் ஒலிக்கும் தீனக்குரலாகி ஓயும் என்பதே. மீண்டும் மீண்டும் உணர்த்தப்படும் இந்த உண்மைகள் திரு. ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை மூலம் மீள அரங்கேறியுள்ளன.

**நிலவன்**

# ஜே.வி.பியின் தேர்தல் வரலாறும் எதிர்கால வாய்ப்புக்களும்



வீரகத்தி தனபாலசிங்கம்

புதிய வருடம் பிறப்பதற்கு இன்னும் சில நாட்களே இருக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் அறிவித்த பிரகாரம் தேசிய தேர்தல்கள் நடைபெறுமானால் அடுத்த வருடம் இலங்கை அரசியல் பரபரப்பானதாக இருக்கப்போகிறது. கடந்த வெள்ளிக்கிழமையும் கூட ஜனாதிபதித் தேர்தல்கள் குறித்துப் பேசினார். அடுத்த வருடம் முதலில் ஜனாதிபதித் தேர்தலையும் அதைத் தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தலையும் பிறகு மாகாண சபை தேர்தலையும் நடத்துவதே தனது திட்டம் என்றும் அவ்வாறு செய்வதன் மூலமாக அரசியலமைப்பில் திருத்தங்களைச் செய்வதற்கு அல்லது புதிய அரசியலமைப்பை வரைவது குறித்து ஆராய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தேர்தல்கள் பற்றிய பேச்சுக்கள் என்று வரும்போது இப்போது பிரதான பாரம்பரிய அரசியல் கட்சிகள் கடந்த காலத்தைப் போன்று உற்சாகமில்லாத மனநிலையில் இருப்பதை குறிப்பாக அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. என்னதான் ஜனாதிபதி விக்கிரமசிங்க தேர்தல்களைப் பற்றி அறிவிப்புக்களை அடிக்கடி செய்தாலும், தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரா இல்லையா என்பதை கூறுவதற்கு மறுத்து வருகிறார். பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்திய பின்னரே தேர்தலில் களமிறங்குவது குறித்து தீர்மானிக்கப்போவதாக அவர் கூறுகிறார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பொறுத்தவரை அதன் தலைவர்கள் எந்தத் தேர்தல் நடந்தாலும் தங்களுக்கே வெற்றி கிடைக்கும் என்று கூறிவருகின்ற போதிலும், அவர்களுக்கு உண்மை நிலை விளங்கும். கடந்த வருடத்தைய பொருளாதார நெருக்கடிக்கு மூன்று ராஜபக்ஷ சகோதரர்கள் பொறுப்பு என்று கடந்த மாதம் உயர்நீதிமன்றம் வழங்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புக்குப் பிறகு ராஜபக்ஷர்களின் மக்கள் செல்வாக்கு மேலும் தாழ்ந்த நிலைக்குச் சென்றிருக்கிறது. அதை நன்கு உணர்ந்தவராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தங்களது ஆட்சிக்கால பொருளாதாரச் செயற்பாடுகளை நியாயப்படுத்தும் ஒரு பிரயத்தனமாக பெருவாரியான புள்ளிவிபரங்களுடன் கூடிய அறிக்கை ஒன்றை இரு வாரங்களுக்கு முன்னர் வெளியிட்டார். அந்த அறிக்கையில் பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்பானவர்கள் என்று உயர்நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருப்பவர்களில் ஒருவரான இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் கைவரிசை தெரிவதாக அவதானிகள் கூறுகிறார்கள்.

2015 ஜனவரியில் பதவியில் இருந்து இறங்கியபோது துடிப்பான ஒரு பொருளாதாரத்தையே கையளித்துவிட்டுச் சென்றதாகவும் அதற்கு பிறகு பதவிக்கு வந்த 'நல்லாட்சி' என்று சொல்லப்பட்ட மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் செயற்பாடுகளே பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணம் என்பதுமே அந்த அறிக்கையின் சாராம்சம். 2015 ஜனவரியில் செய்ததைப் போன்ற அரசியல் தவறை நாட்டு மக்கள் மீண்டும் செய்யக்கூடாது என்று அறிக்கையின் இறுதியில் மஹிந்த கூறியிருப்பது தங்களையே மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டுவரவேண்டும் என்று மக்களுக்கு அவர் வழங்கும் 'ஆலோசனை' என்பதை தவிர வேறு எதுவாக இருக்க முடியும்? ராஜபக்ஷர்களைப் பொறுத்தவரை ஒன்றில் தாங்கள் அதிகாரத்துக்கு மீண்டும் வரவேண்டும் அல்லது கடந்தகால தவறுகளுக்காக தங்களைப் பொறுப்புக்கூற வைக்காத அரசாங்கம் ஒன்று பதவிக்கு வருவதை உறுதிசெய்யவேண்டும். அதை அடிப்படையாகக் கொண்டதாகவே அவர்களின் வியூகங்கள் அமையும். அதனால் அவர்களிடம் இருந்தும் தெளிவான அறிவிப்புக்கள் வருவதாக இல்லை.

ஆனால், தேர்தல்கள் தொடர்பில் மிகுந்த நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் பேசுகின்ற அரசியல் இயக்கமாக தேசிய மக்கள் சக்தியை காணமுடிகிறது. அதன் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவே ஜனாதிபதித் தேர்தலில் இன்றைய நிலையில் முன்னரங்க வேட்பாளராக விளங்கும் ஒரு தோற்றப்பாடு அரசியல் பரப்பில் காணப்படுகிறது. ஊடகங்களையும் அவர் அண்மைக்காலமாக ஆக்கிரமித்து நிற்கிறார். நாட்டு மக்களில் இளைஞர்கள் உட்பட அதிகப்பெரும்பான்மையானவர்கள் தேர்தல்களில் மாத்திரமல்ல, அரசியல் கட்சி முறைமையிலும் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்றும் சகல கட்சிகளும் சேர்ந்து பெறக்கூடிய வாக்குகளும் கூட மொத்த வாக்குகளில் ஐம்பது சதவீதத்தை தாண்டப்போவதில்லை என்றும் இவ்வருட நடுப்பகுதியில் நுவரெலியாவில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தேசிய சட்ட மகாநாட்டில் ஜனாதிபதி விக்கிரமசிங்க கூறியதை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது. அண்மைக்கால கருத்துக் கணிப்புக்கள் சகலதுமே தேசிய மக்கள் சக்தியே மக்கள் செல்வாக்கில் முன்னிலையில் இருப்பதை வெளிக்காட்டின.

இறுதியாக அக்டோபரில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு (Sri Lanka Opinion Tracker Survey of the Institute of Health Policy) ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தேவையான ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறக்கூடிய அளவுக்கு திசாநாயக்கவின் மக்கள் செல்வாக்கு அதிகரித்திருப்பதாகக் கூட தெரிவித்தது. திசாநாயக்கவுக்கு 51 சதவீதமும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு 30 சதவீதமும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு 13 சதவீதமும் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகக் களமிறங்கக்கூடியவருக்கு 6 சதவீதமும் மக்கள் ஆதரவு இருப்பதாக அது கூறியது. கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்கள், சர்வதேச அமைப்புக்கள், சிந்தனை குழாம்கள் மற்றும் அரசியல் கட்சிகளும் கூட இந்தக் கருத்துக் கணிப்புக்களினால் மருட்சிக் குள்ளாகியிருக்கின்றன. கொழும்பிலும் மாகாணங்களிலும் குறிப்பிட்ட எண்ணிக்கையான மக்களிடம் கருத்துக்களை கேட்டறிந்து செய்யப்பட்ட இந்த கருத்துக்கணிப்பின் நம்பகத்தன்மை குறித்து பலருக்கு சந்தேகம் இருக்கலாம். கருத்துக் கணிப்புகளில் மக்கள் கூறுகின்றவற்றுக்கும் அவர்கள் வாக்களிக்கும் முறைக்கும் இடையில் வேறுபாடு இருக்கலாம். அதற்கு பல தேர்தல்களை உதாரணமாகக் கூறமுடியும். ஆனால், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளின் விளைவாகவும் பிரதான அரசியல் கட்சிகள் மீதான வெறுப்பின் விளைவாகவும் இலங்கையர்கள் மத்தியில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற அரசியல் மனப்போக்கை கருத்திற்கொண்டு நோக்கும்போது மேற்கூறப்பட்ட தரவுகளின் பிரகாரம் அல்லது அவற்றை ஓரளவுக்கு ஒத்த முறையில் மக்கள் வாக்களித்தால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை என்றும் ஜனாதிபதித் தேர்தலில் முதலாவது சுற்று வாக்கெடுப்பில் எந்த வேட்பாளருக்கும் ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைக்காமல் இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கைக்கு செல்லவேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் சில அவதானிகள் கூறுகிறார்கள்

கடந்த வாரம் 'சண்டே ரைம்ஸ்' அரசியல் விவகார ஆசிரியருக்கு அநுரகுமார திசாநாயக்க வழங்கிய நேர்காணலில் 2019 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு 3.1 சதவீத வாக்குகள் மாத்திரமே கிடைத்தன. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறவேண்டுமானால் 1500 சதவீதம் அதன் வாக்குகள் அதிகரிக்கவேண்டும் என்று அவரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கு பதிலளித்த திசாநாயக்க, "அரசியல் கணிதம் அல்ல, அது சமூக அறிவியல். அவ்வாறு வாக்குகளை அதிகரிப்பது கணிதத்தின் அடிப்படையில் யதார்த்தமில்லாததாகத் தோன்றலாம். ஆனால், சமூக அறிவியலின் பிரகாரம் அது சாத்தியமாகும்" என்று கூறினார்.

இத்தகைய பின்னணியில் ஜே.வி.பியின் தேர்தல் வரலாற்றில் இதுகாலவரையான அதன் செயற்பாடுகளை ஒரு தடவை திரும்பிப் பார்ப்பது உகந்ததாக இருக்கும். ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜேவீர 1982 அக்டோபர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சந்தர்ப்பமே அந்தக் கட்சியின் முதல் தேர்தல் அனுபவமாகும். அதுவே இலங்கையின் முதலாவது ஜனாதிபதித் தேர்தலுமாகும். அதில் விஜேவீரவுக்கு வெறுமனே 275,000 வாக்குகளே கிடைத்தன. ஆனால், அவரால் பழம்பெரும் இடதுசாரித் தலைவரான கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வாவை விடவும் கூடுதலான வாக்குகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

1983 கறுப்பு ஜூலை இனவன்செயல்களை அடுத்து ஜெயவர்தன அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டதற்குப் பிறகு 1994ஆம் ஆண்டிலேயே ஜே.வி.பி. மீண்டும் தேர்தலில் போட்டியிட்டது. 1994 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையிலான பொதுஜன முன்னணியின் வேட்பாளரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு எதிராக ஜே.வி.பி அதன் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான நிஹால் கலப்பதியை நிறுத்தியது. ஆனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பதாக மக்களுக்கு வாக்குறுதியளித்த திருமதி குமாரதுங்கவை ஆதரிக்க தீர்மானத்தை அடுத்து ஜே.வி.பி போட்டியில் இருந்து விலகினாலும், கலப்பதியின் நியமனப்பத்திரம் வாபஸ் பெறப்படவில்லை. அதனால் அவரது பெயரும் சின்னமும் வாக்குச்சீட்டில் இடம்பெற்றது. அவருக்கு 22, 749 (0.03 சதவீதம்) வாக்குகள் கிடைத்தன. பிறகு 1999 டிசம்பர் ஜனாதிபதி தேர்தலில் தனது இரண்டாவது பதவிக்காலத்துக்கு மக்களின் ஆணையைக் கேட்ட திருமதி குமாரதுங்கவை எதிர்த்து ஜே.வி.பியின் வேட்பாளராகப் போட்டியிட்ட நந்தன குணதிலகவுக்கு 344,173 (4.08 சதவீதம்) வாக்குகள் கிடைத்தன. 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் அந்தக் கட்சி சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்தது. அதற்குப் பிறகு நடைபெற்ற 2010 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக எதிரணியின் பொதுவேட்பாளராக களமிறக்கப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை ஜே.வி.பி ஆதரித்தது.

அதேபோன்றே 2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலிலும் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக எதிரணியின் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவை ஜே.வி.பி ஆதரித்தது. இறுதியாக நடைபெற்ற 2019 ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்து ஜே.வி.பியின் புதிய அவதாரமான தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக அநுரகுமார திசாநாயக்க போட்டியிட்டு 418,533 (3.16 சதவீதம்) வாக்குகளைப் பெற்றார்.

நாடாளுமன்றத் தேர்தல்களைப் பொறுத்தவரை, ஜே.வி.பி முதற்தடவையாக 1994 ஆகஸ்ட் தேர்தலில் போட்டியிட்டு மொத்தம் 90,078 (1.13 சதவீதம்) வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தை வென்றெடுத்தது. 2000 நாடாளுமன்றத் தேர்தலில் அந்த கட்சிக்கு 518,774 (6.00 சதவீதம்) வாக்குகள் கிடைத்து பத்து ஆசனங்களைக் கைப்பற்றக்கூடியதாக இருந்தது. 2001 டிசம்பர் நாடாளுமன்றத் தேர்தலில் 815,353 (9.10 சதவீதம்) வாக்குகளைப் பெற்ற ஜே.வி.பி 16 ஆசனங்களை தனதாக்கிக்கொண்டது. 2004 ஏப்ரில் நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திர கட்சியுடன் இணைந்து அமைத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூலமாக போட்டியிட்டு 4,223, 970 (45.60 சதவீதம்) வாக்குகளைப் பெற்ற ஜே.வி.பி 39 ஆசனங்களைக் கைப்பற்றியது. இதுவே அந்த கட்சிக்கு அதன் வரலாற்றில் கிடைத்த அதிகூடிய எண்ணிக்கை ஆசனங்களாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுருக்காவிட்டால் அவ்வாறு பெருமளவு ஆசனங்களை ஒருபோதும் ஜே.வி.பியினால் கைப்பற்றியிருக்க முடியாது. அதன் பிறகு வந்த தேர்தல்கள் தெளிவாக நிரூபித்தன. 2010 ஏப்ரில் நாடாளுமன்றத் தேர்தலில் 441,251 (5.49 சதவீதம்) வாக்குகளை பெற்று 4 உறுப்பினர்களுடன் மாத்திரமே ஜே.வி.பி நாடாளுமன்றத்துக்கு வந்தது. மீண்டும் 2015 ஆகஸ்ட் நாடாளுமன்றத் தேர்தலில் 553,994 (4.87 சதவீதம்) வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களையும் இறுதியாக 2020 ஆகஸ்ட் நாடாளுமன்றத் தேர்தலில் 445,958 (3.84 சதவீதம்) வாக்குகளுடன் 3 ஆசனங்களையும் ஜே.வி.பி கைப்பற்றியது.

இந்த விபரங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இரு சந்தர்ப்பங்களை தவிர மற்றும்படி ஜே.வி.பி சராசரியாக 3 இலட்சத்துக்கும் 5 இலட்சத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் வாக்கு வங்கியைக் கொண்டதாக இருந்து வந்திருப்பதைக் காண முடியும். அத்தகைய ஒரு நிலையில் இருந்து ஜனாதிபதித் தேர்தலில் ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறக்கூடிய அளவுக்கு ஜே.வி.பி தேசிய மக்கள் சக்தியை நாட்டு மக்கள் ஆதரிக்கப் போகிறார்களா? திசாநாயக்க கூறிய சமூக அறிவியல் அத்தகைய பிரமாண்டமான மாற்றம் ஒன்றை அடுத்த வருடம் ஏற்படுத்தப்போகிறதா?

ஜனாதிபதித் தேர்தல்களில் எத்தனை பேர் போட்டியிட்டாலும், இறுதியில் இரு பிரதான வேட்பாளர்களுக்கும் இடையிலேயே உண்மையான போட்டி இருக்கும். மூன்றாவது வேட்பாளரும் அவருக்குப் பின்னால் வருபவர்களும் பொருட்படுத்தக்கூடிய அளவுக்கு வாக்குகளைப் பெறுவதில்லை. ஜே.வி.பி அவ்வாறான ஒரு கட்சியாக இருந்து வந்ததை கண்டதே இதுவரையான எமது அனுபவமாக இருக்கிறது. ஆனால், கருத்துக் கணிப்புக்களின் அடிப்படையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பிரதான வேட்பாளர்களில் ஒருவராக திசாநாயக்க விளங்கப்போவதாக கூறப்படுகின்ற நிலையில் ஜே.வி.பி தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டை அதன் கடந்த கால செயற்பாடுகளின் அடிப்படையில் இனிமேலும் மதிப்பிடுவது பொருத்தமானதாக இருக்காது. திசாநாயக்க ஜனாதிபதியாக வருவாரா இல்லையா என்பது வேறு விடயம். ஆனால், அடுத்த தேசிய தேர்தல்களுக்குப் பிறகு இலங்கையின் அரசியல் கோலங்களில் பாரிய மாறுதல்களைக் காணக்கூடியதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# ஜனாதிபதித் தேர்தலும், தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடும்



ஜனாதிபதித் தேர்தல் அடுத்தவருடம் நடைபெறவிருக்கின்றது. இதனை முன்னிட்டு அதற்கான சகல ஏற்பாடுகளும் நடத்தப்பட்டு வருகின்ற அதேநேரம், தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்று இறுதி முடிவு எடுக்கப்போகின்றார்கள் என்பதில் இழுபறிகள் தோன்றியுள்ளன. இதற்கு முன்னர் ஆட்சியாளர்களாகவிருந்தவர்களை பார்க்குமிடத்து டட்லி சேனநாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா, ரணசிங்க பிரேமதாஸ, ஜே.ஆர். ஜெயவர்த்தன, சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ,தற்பொழுது இருக்கக்கூடிய ரணில் விக்கிரமசிங்க போன்ற இவ்வாட்சியாளர்கள் அனைவருமே தமிழ் இனத்தினை ஏமாற்றியே அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த வரலாறுகளே இதுவரை காணப்படுகின்றது.

தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை இரண்டுமே அற்றுப்போயுள்ள நிலையில் இருக்கக்கூடிய கோவணத்தையாவது தக்கவைத்துக்கொள்வதற்கு அதாவது தமிழினத்தினை காப்பாற்றுவதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும், அதிலுள்ள தமிழரசுக்கட்சியும் சரியான முடிவுகளை எடுப்பது சிறந்ததொன்றாகும். இச் சூழலில் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சிகளுக்குள் பிரச்சினைகள் எழுந்து திசைமாறி நிற்கின்றன. காலத்திற்குக் காலம் அரசியல் மாற்றம் பெற்றுக்கொண்டே செல்ல, சிங்கள ஆட்சியாளர்கள் தமிழினத்திற்கு துரோகத்தினை ஏற்படுத்திய வரலாறுகளே இதுவரை காலமும் இருந்துவந்தது. சிறிமாவோ பண்டாரநாயக்கா மற்றும் டட்லி சேனாநாயக்கா போன்றோர் இருந்த காலப்பகுதியில் இனக்கலவரத்தினை தோற்றுவித்திருந்தனர்.

விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடுவதாகக் கூறி இந்திய அரசுடன் இணைந்து சதி வேலைகளில் ஈடுபட்டார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன.அதன்பின்னர் ஆட்சிபீடத்திற்கு வந்த ரணசிங்க பிரேமதாஸ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்குவது போன்றும், தமிழினத்தினைக் காப்பாற்றுவது போன்றும் நாடகமாடி விடுதலைப்புலிகளின் போராட்டத்தினை அழித் தொழிப்பதற்கான திட்டங்களை வகுத்தார். அதன் காரணமாகவே விடுதலைப் புலிகளினால் ரணசிங்க பிரேமதாஸ அவர்கள் கொலை செய்யப்பட்டார்.

அது மட்டுமல்லாது இவர்களோடு ஒத்து ஊதுகுழல் பாடிய இயக்கங்களும் உள்ளடக்கப் படுகின்றன. ஆனால் இவ்வியக்கங்கள் அனைத்தும் தற்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் தமிழ் மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்ற மனப்பாங்குடன் செயற்பட்டு வந்த நிலையில், கருத்து முரண்பாடு களால், உள் வீட்டுப்பிரச்சினைகளால் தமிழரசுக் கட்சி இன்று தனித்து நிற்கின்றது. ரெலோ மற்றும் புளொட் கட்சிகள் தனியாக செயற்பட்டு வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று இல்லை என்கிற அளவுக்கு நிலைமைகள் தலைகீழாக மாறியுள்ளன.

ரணில் விக்ரமசிங்கவின் காபந்து அரசாங்கம் தமிழினத்திற்கு எதிராக சதித்திட்டங்களைத் தீட்டியது. சந்திரிக்காவினுடைய காலகட்டத்தில், விடுதலைப்புலிகள் தமிழினத்தின் வெற்றியை நூற்றுக்கு 50 வீதமாக சமப்படுத்திக்கொண்டிருந்த போது, தமிழீழம் தமிழ் மக்களுடைய கையில் என்ற நிலையில் இருந்தபோது அமெரிக்காவுடன் இணைந்து சதித்திட்டங்களை ஏற்படுத்தி விடுதலைப்புலிகளையும், தமிழினத்தினையும் அழித்தொழிக்கும் நடவடிக்கையில் சந்திரிக்காவின் அரசு தீவிரம் காட்டியது.

ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள் என்று ஆரம்பித்து டோக்கியோ போன்ற பல நாடுகளிலும் பல்வேறு கட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு அனைத்தும் தோல்வியில் நிறைவடைந்தன. இதில் ரணில் விக்ரமசிங்கவினுடைய கள்ளத்தனம், குள்ளநரி விளையாட்டுக்களும் உள்ளடக்கப்படுகின்றன. இதே ரணில் விக்ரமசிங்க அவர்கள் தான் இன்று நாட்டின் உயர் பதவியான ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்து தனது காய்களை பக்குவமாக நகர்த்தி வருகிறார். இன்று இருக்கக்கூடிய பிரதான கட்சிகளை பிளவடையச் செய்துள்ளார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஆணையைப் பெற்று அரியணையில் அமரத் திட்டம் தீட்டிச் செயற்பட்டும் வருகின்றார்.

தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலையில் சந்திரிக்கா அரசு மஹிந்தவிடம் ஆட்சியை கைமாற்றிக்கொடுத்தது. இதனுடைய விளைவுகளே தற்பொழுது அரங்கேறி வருகின்றன. மஹிந்த ராஜபக்ஷவினைப் பொறுத்தவரையில் தமிழினத்திற்கு அநியாயங்களைச் செய்தாலும், முன்னைய அரசாங்கங்களைவிட கடன் வாங்கியோ வாங்காமலோ தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, இலங்கையில் வாழக்கூடிய அனைத்து மக்களுக்கும் வீதிகளை செப்பனிட்டுக் கொடுத்துள்ளார். பல கட்டுமான வேலைகளைச் செய்தார். சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த தன்னாலான அனைத்து வேலைத் திட்டங்களையும் செய்து, தெற்கின் மக்கள் மத்தியில் ராஜாவாக வலம் வந்தார். முந்தைய அரசாங்கங்கள் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் செயற்பட்டது போன்று செயற்படவில்லை. யுத்தக் குற்றங்களில் இருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, தனது சகோதரர்களுக்கு உயர் பதவிகளை வழங்கி, தனது குடும்பத்தை பாதுகாப்பாக வைத்திருந்தார். சர்வதேச நாடுகளின் கண்களில் மண்ணைத்தூவி, சீனாவின் செல்லப் பிள்ளையாக மாறினார்.

மஹிந்த ராஜபக்ஷவினால் மாவிலாறில் ஆரம்பித்த தமிழினச் சுத்திகரிப்பு முள்ளிவாய்க்காலில் நிறைவுபெற்றது. ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும், காணாமற் போயுமுள்ளனர். இதனை இல்லை என்று மஹிந்த தரப்பினர் கூறி தப்பித்துவிட முடியாது. அவ்வாறுதான் நடந்துகொள்ளவிலலை என அரச தரப்பு கூறிவருகின்றபொழுதிலும், மனித உரிமை அமைப்புகள், ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நாடுகள் சபை போன்றன மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஒரு இனச் சுத்திகரிப்பினையே மேற்கொண்டார் என்பதனை ஆதாரத்துடன் நிரூபித்து வருகின்றன. அதற்கு உறுதுணையாக சனல் 4 தொலைக்காட்சி முக்கிய பங்கு வகிக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் பொறுத்த வரையிலும் கட்சிகளுக்குள் இருக்கும் முரண்பாடுகளைக் களைந்துவிட்டு, தமிழினத்தின் விடிவுக்காக அறவழியில் போராட்டங்களை ஆரம்பித்து, வடகிழக்கில் சுபீட்சமானதொரு தீர்வு கிடைக்கவேண்டுமென்ற ரீதியில் செயற்படவேண்டும். மாறாக பிளவடைந்து செயற்படுவதால் பயன் ஒன்றும் ஏற்படப்போவதில்லை. ஒற்றுமை குலைந்தால் எதிரிக்கே கொண்டாட்டம் என்பதை மனதிற் கொள்ளவேண்டும். தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்துவந்தனர். தற்பொழுது அவர்களுடைய பரிணாமங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இருக்கின்றது. இன்று இக்கூட்டமைப்பு சிதைந்து போயுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுவதை தமிழ் மக்கள் நடைமுறைப்படுத்த தயாராகவிருக்கின்ற அதேநேரம், பிழையான நடவடிக்கைகளின் மூலம் தமிழினத்தினை மீண்டுமொரு வன்முறை கலாசாரத்திற்குள் இட்டுச்செல்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. தமிழ்த் தேசியக் கட்சிகள் மீண்டும் ஒரு குடையின் கீழ் இணைந்து பயணிக்க முன்வரவேண்டும். உங்களுக்குள் பிரச்சினைகளை வைத்துக்கொண்டு, தமிழினத்தை எவ்வாறு வழிநடத்தப் போகிறீர்கள்?.

அதேநேரம் இந்தியாவின் ஆலோசனைகளையும், ஆயுத உதவிகளையும நம்பி ஏமாற்றமடைந்த வரலாறுகளை புரட்டிப்பார்க்க வேண்டும். இந்தியாவினால் தான் தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும் என்று கூறுவது இந்திய அரசினை பப்பா மரத்தில் ஏற்றும் ஒரு செயலாகும். இந்திய அரசினால் தமிழினத்திற்கு எந்தவித தீர்வுகளும் கிடைக்கப்போவதில்லை. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் காப்பாற்றத் தவறிய இந்தியரசு இனித்தான் தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுத்தரப்போகின்றதா? என்பதனை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பிரபாகரன் கூறியதைப் போன்று ஆயுதப் போராட்டத்தினால் தான் போராடி ஒரு நிலையில் நின்றுகொண்டு, எமது தமிழர் தாயகத்தினை அரசிடம் கேட்க வேண்டுமே தவிர, அவைகளோடு ஒத்துப்பாடி கைகோர்த்துச்சென்றால் மீண்டும் அவர்கள் எம்மை காலால் மிதிப்பார்கள். ஆயுதப்போராட்டம் இல்லையென்றாலும் அஹிம்சை வழியில் போராடியாவது வடகிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களை வென்றெடுக்கவேண்டும்.

தொடர்ந்துவந்த அரசாங் கங்கள் எம் தமிழினத்திற்கு செய்து வந்தது வரலாற்றுத் துரோகமே. அன்ரன் பாலசிங்கம் கூட ரணில் ஆட்சிக்கு வந்தால் எவ்வாறிருக்கும் என்பது பற்றி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். அது எவ்வாறெனில் ரணில் ஒரு குள்ளநரி. அதனை விட மஹிந்த மற்றுமொரு குள்ளநரி. இருவருமே தமிழினத்திற்கு ஒன்றும் செய்யப்போவதில்லை. அதற்கு பௌத்த சிங்கள இனவாதிகளும் ஒத்துழைப்பு வழங்கமாட்டார்கள். மாறாக வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளின் உதவியுடன் வடகிழக்கினை பிரித்தெடுத்தல் சாத்தியப்படுமே தவிர, UNP அரசிற்கு வாக்களித்தாலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு வாக்களித்தாலும் ஒன்றுதான். அதாவது அண்ணன் வந்தாலும் தம்பி வந்தாலும் ஒன்று என்ற பழமொழிக்கேற்ப இவை அமையப்பெறுகின்றன.

**மறவன்**

# “இலங்கையில் தமிழர்களின் பூர்வீகம் என்பது பெருங்கற்கால பண்பாட்டுடன் தொடர்புடையது”

– பேராசிரியர் சி.பத்மநாதன் –

கடந்தவாரத் தொடர்ச்சி...

வெல்லாவெளி

கொக்கட்டிச்சோலையிலுள்ள தேர்களே அருங்காட்சியகத்திற்குரியதாகி விட்டன. இவற்றை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டுமானால், அவற்றிற்கு நிரந்தரமாக ஒரு கொட்டகைகளை அமைத்து ஒரு ஆலய அருங்காட்சியகத்துடன் இணைத்து வைத்திருப்பது தான் ஒரேயொரு வழி. அல்லாவிட்டால் அதிலிருக்கும் சிற்பங்கள் அழிந்து சிதைந்து பலரும் எடுத்துக் கொண்டு போய் பயன்படுத்துவர். இதேபோல் செங்கட்டிகள், கருங்கல், உலோகப் பொருட்கள் என பல உண்டு. இவற்றை பாதுகாக்க வேண்டும். இவற்றை விற்கக் கூடாது.

இதுவரை காலமும் தொல்பொருள் சின்னங்களை அதாவது உலோகப் பொருட்களை வெறும் தகட்டின் பெறுமானங்களுக்கு வியாபாரிகளுக்கு விற்பதுண்டு. ஆலய நிர்வாகத்தினரும் இந்த குற்றகாரியத்தை செய்துள்ளனர். இனியாவது இதை தவிர்த்துக்கொள்ளவேண்டும். மற்றது மலைகள், மலைப்பாறைகளிலுள்ள தொல்பொருள் சின்னங்கள் மிக வேகமாக தகர்க்கப்படுகின்றன.

இதை தடை செய்வதற்கான வழிவகைகளை பல மட்டங்களிலும் தேடிக்கொள்ள வேண்டும். இங்கே வாகரை, கதிரவெளியில் சில மலைகளிலே வாசகங்கள் எழுதப்பட்ட கற்பாறைகள் உண்டு. இருந்தும் அவை முற்காலத்தில் நாகர்களுடைய வாழ்விடங்களாக, கோட்டைகளாக இருந்துள்ளன.

இவற்றைப் பற்றி எவரும் அறிந்திருக்கவில்லை. தொல்லியல் திணைக்களமும் அக்கறைகொள்வதாக இல்லை. அவர்களுக்கு இங்கு கல்வெட்டு இருப்பது தெரியாது. இவர்களெல்லாம் மாற்றான் பால் மனப்பான்மையோடு இருப்பதால். இலங்கையில் அரச திணைக்களங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் கற்களை வழங்குபவர்கள் பெரிய இயந்திரக் கருவிகளைக்கொண்டு கணப்பொழுதில் உடைத்துவிடக்கூடிய நிலை காணப்படுகின்றது.

அவர்களுக்கு பொருள் தான் தேவை. தொல்பொருள் சின்னங்கள், வரலாறுகள் பற்றி எந்ததேவையும் இல்லை. அக்கறையும் இல்லை. குரங்கு கொடி போட்ட மலை என்று வாகரைப் பிரதேச எல்லையில் காணப்பட்டது. அதிலே எழுத்துப் பொறித்த பல கற்கள் இருந்தன. மேலே இருந்த பௌத்த பள்ளி இடிபாடுகளாகிவிட்டது. ஆனால் அதில் ஒரு பாகத்திலிருந்த நாகக் கல் அளவிலே பெரியது. பிரமாண்டமானது. தூரத்திலிருந்து காணக்கூடியதாக இருந்தது. 2 வருடங்களின் பின் போனால் மலையும் இல்லை. மலை அடிவாரமும் இல்லை.

கீழே நீர் தேங்கி நிற்கும் ஒரு பள்ளம் தான் தெரிகின்றது. மற்ற மலைப்பாறைகளை மிக விரைவிலே அழித்துவிடுவார்கள்.

வெல்லாவெளி வெள்ளி மலையிலே நாகர்கள் அமைத்த நீர்த் தடாகம் ஒன்று இருந்தது. அதிலே வருடத்தின் எல்லா மாதங்களிலும் நீர் தேங்கி நிற்கும். விளிம்புகளில் தமிழ் வசனங்கள் எழுதப்பட்டிருந்தன. என்ன விபரீதம் என்றால் இந்து சமய கலாசார திணைக்களத்திடம் கோவில் கட்டுவதற்கு 10 இலட்சம் ரூபாவை பெற்ற அங்கிருந்த கோயில் நிர்வாகிகள் தேர் ஓடும் வீதியை அமைப்பதற்கு இந்தச் சின்னங்கள் தடையாய் இருப்பதாகக் கூறி இந்த சின்னங்களை அழித்துவிட்டார்கள். இது ஒரு அலட்சியப் போக்கு.

அறிவின்மை எங்கள் சமூகத்தினுடைய அடிப்படையான சின்னங்களையே தொலைத்து விடுகின்றமைபெருமளவில்தண்டனைக்கும் கண்டனத்திற்கும் உரியது. அவற்றிற்கு வழிவகைகள் இல்லாததாலேயே இவர்கள் இவற்றை செய்வதற்கு துணிகின்றார்கள்.

# ‘Operation Trust’ - நாடு கடந்த தமிழீழ அரசைக் கவிழ்க்கத் திட்டம்

கடந்தவாரம் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி...

இது, சிறிலங்கா இராணுவம் புலம்பெயர் மண்ணில் மேற்கொள்கின்ற Operation Trust போன்ற ஒரு உறுதியான, நீண்டகால செயற்பாட்டுக்கான வழிவிடுதலாகக் கூட இருக்கலாம். புலம்பெயர் தமிழர்கள் சற்று ஆழமாகச் சிந்திக்கவேண்டிய தருணம் இது.

இந்த இடத்தில் ஒரு முக்கிய விடயத்தை தெளிவுபடுத்திவிட விரும்புகின்றேன். வன்னி மற்றும் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மரணத்தின் பிடியில் இருந்து மயிரிழையில் தப்பித்து, உயிரைக் கையில் பிடித்தபடி மேற்குலகில் தஞ்சமடைந்திருக்கும் பலர் இன்று எம்மத்தியில் இருக்கின்றார்கள். அவர்களின் உண்மையும், தூய்மையும் உண்மையிலேயே மெச்சத்தக்கது. அவர்களது வழிகாட்டல்களும், ஆலோசனைகளும் புலம்பெயர் தமிழர்களுக்கு நிச்சயம் தேவை என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனாலும் இவர்கள் மத்தியில் கலந்து சிறிலங்காப் புலனாய் வாளர்களால் அனுப்பப்படும் உளவு ஏஜன்டுக்கள் பற்றிய எச்சரிக்கை உணர்வையும் நாம் கொண்டிருப்பது இச்சந்தர்ப்பத்தில் மிக மிக அவசியம்.

இல்லாவிட்டால், புலம்பெயர் தமிழர்களின் விடுதலை உணர்வை திசைதிருப்பும் ஒருவகை Operation Trust உளவு நடவடிக்கைக்கு அநியாயமாகப் பலியாகிப்போன மற்றொரு இனம் என்கின்ற பெயர் வரலாற்றில் எமக்கு கிடைத்துவிடும். - நிராஜ் டேவிட்

**மாவிலாறு மகிந்தவும்**
**முள்ளிவாய்க்கால் பிரபாகரனும்**
**- நடந்தது என்ன?**

என்கிற தொடர் கட்டுரை அடுத்த வார இதழில் வெளியாகும்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்மை எங்கு அழைத்துச் செல்லும்?

கடந்தவாரத் தொடர்ச்சி...

அத்துடன், தமிழர்களின் தேசியம், சுயநிர்ணயம், தன்னாட்சி உரிமைகள் பற்றி இலங்கை நாடாளுமன்றத்திலும் குரலெழுப்ப வேண்டிய தேவையும் இருந்தது. எனவே, புலிகள் ஜனநாயக வழியிலும் தமது நிலைப்பாட்டை விளக்குவதற்கு, தமது பூரண கட்டுப்பாட்டில் இயங்கக்கூடிய அரசியல்வாதிகளை இணைத்துக் கூட்டமைப்பொன்றை உருவாக்கினார்கள். இதில் புலிகளின் அச்சுறுத்தலை எதிர்கொண்டவர்கள் தம் பாதுகாப்புக்காகவேனும் இணைந்து கொண்டார்கள். கூட்டமைப்பில் இணைந்துகொண்ட அனைவரும் தமிழர் அரசியல் போராட்டத்தின் ஏகபிரதிநிதிகள் புலிகளே என்பதை ஏற்றுக்கொண்டுதான் கிளிநொச்சிக்கு வந்துபோனார்கள். ஆனால், சந்தர்ப்பம் பார்த்து உள்ளே கனன்றது புலியெதிர் நெருப்பு.

**புலிகள் கூட்டமைப்புடன் கொண்டிருந்த உறவு**

2004ஆம் ஆண்டில் புலிகள் முதலாவது தேர்தலை எதிர்கொண்டார்கள். அதற்காகப் புலிகளால் அடையாளம் காணப்பட்டவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பாகக் களமிறக்கப்பட்டார்கள். வெளியில் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பு என்கிற பிம்பத்தைக் காட்டினாலும், புலிகள் கூட்டமைப்பை இரண்டு அடுக்காகப் பிரித்துக் கையாண்டார்கள். ஒன்று பழையவர்கள், மற்றையது புதியவர்கள். பழையவர்களை சற்றுத் தள்ளியே வைத்திருந்தனர். எச்சரிக்கையோடும், சந்தேகத்தோடும் அணுகினார்கள். ஏனெனில், பழையவர்களின் கடந்தகால அரசியல் பற்றி புலிகளுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. தமிழ் தேசியத்திலும், புலிகளின் கொள்கையிலும் பற்றுறுதியுடன் செயற்படுகின்ற தொகுதியினரைப் புதியவர்கள் அணியில் வைத்துக் கொண்டனர். கூட்டமைப்புக்குள் இருந்த இந்தப் புதியவர்கள் அணியே புலிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகச் செயற்பட்டது. பழையவர்களின் கொழும்பு, இந்திய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியதுடன், புலிகளுக்கான அறிக்கையிடலையும் புதியவர்கள் செய்தனர்.

எனவே, பழையவர்களுக்குப் புதியவர்கள் எப்போதும் சவாலான வர்களாகவும், கழற்றிவிட வேண்டிய வர்களாகவும் இருந்தனர். ஆனால், புலிகளுக்குப் பழையவர்கள் எப்போதும் சவாலானவர்களாகவும், கழற்றிவிடப்பட வேண்டியவர்களாகவும் இருந்தனர். இந்த மீள் முரணோடுதான் புலிகள் தமிழ் தேசிய கூட்டமைப்புடனான உறவைப் பேணினார்கள். ஆயினும், புலிகள் பலமாக இருக்கும் வரை கிளிநொச்சியின் குரலாகத் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் ஒலித்தது. போராளிகள் தயாரித்த கிளிநொச்சியின் அறிக்கையே நாடாளுமன்றத்தில் வாசிக்கப்பட்டது.

கூட்டமைப்பைப் புலிகள் தந்திரமாகக் கையாண்டமையும், கூட்டமைப்பு தொடர்பில் புலிகள் கொண்டிருந்த அபிப்பிராயமும் புலிகளுக்குள் மட்டுமே இருந்த சங்கதிகள். வெளித்தோற்றத்திற்குப் புலிகளின் கொள்கைகளை இலங்கை நாடாளுமன்றத்திலும், சர்வதேச அரங்கிலும் ஓங்கி ஒலிக்கச் செய்பவர்களாகக் கூட்டமைப்பினர் நோக்கிய பிம்பம் உருவாகியது. மக்களின் பார்வையில் புலிகளின் நேரடி அரசியல் பிரிவாகவே கூட்டமைப்பு தெரிந்தது. இன்றும் சிறைகளில் வாடும் சில முன்னாள் போராளிகள் “சம்பந்தன் ஐயா எங்களின் இன்னொரு தலைவர்” என்று கூறுவதற்கு இந்தக் காலப்பகுதியில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மீது புலிகள் உருவாக்கிக்கொடுத்த அட்டகாசமான விளம்பரங்களே காரணம்.

**இறுதிப் போர்க்கால கூட்டமைப்பு**

2008ஆம் ஆண்டுடன் போர் உச்சம்பெற, கிளிநொச்சிக்கும் அதாவது, புலிகளுக்கும் இடையிலான தொடர்பின் வலு குறைந்தது. கிளிநொச்சி இராணுத்திடம் விழ புலிகளுக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட, 2009ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்காலில் மூண்ட போர் தீ, எரிந்து, கருகி, சாம்பலாகும் வரை சாக்குப்போக்கு அரசியலை முன்னெடுத்தார் இரா.சம்பந்தர்.

செத்து வீழ்ந்த தமிழர்களைக் காப்பாற்றவும், தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கிய விடுதலைப் புலிகளுக்குக் கைகொடுக்கவுமான எவ்வித நடவடிக்கைகளையும் சம்பந்தன் மேற்கொள்ளவில்லை. புலிகள் பலமாக இருந்த காலத்தில் அவர்களால் நிராகரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே போர் நிறுத்தம் பற்றி தான் பேச முடியும் என்று சொல்லிவிட்டு வழமைபோல கண்ணை மூடிக்கொண்டார். இரா.சம்பந்தன் கண்திறப்பதற்குள் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள். முள்ளிவாய்க்கால் முற்சையாக எஞ்சிய தமிழர்கள் வவுனியாவுக்கு சாய்த்து வரப்பட்டார்கள். போர் முடிந்ததும், “புலிகள் மேற்கொண்ட ஜனநாயக விரோத செயற்பாடுகளினாலேயே அழிந்து போனார்கள்” என சம்பந்தன் கருத்துத் தெரிவித்தார்.

**கூட்டமைப்பின் இரண்டாம் காலம் (2010)**

இவ்வாறாகவே இரா.சம்பந்தன் 2010இல் வெளியே வந்தார். வெளியே எனில், 2010ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலுக்கு. கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் இது இரண்டாம் காலம். தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதலாம் காலம் புலிகளோடு முடிவடைய, இரண்டாம் காலம் புலிகளற்ற அரசியல் வெளியில் ஆரம்பமானது. இந்தக் காலத்தில் 4 முக்கிய பணிகளைத் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் நிகழ்ச்சி நிரல்படுத்தினார்.


**1ஆம் பணி**

இரண்டாம் காலத்தைப் பொறுப்பெடுத்தவுடனேயே இரா.சம்பந்தன் செய்த முதல் பணி, தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் இருந்த புலிகளின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு, தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல தயாராயிருந்த புதியவர்களை வெற்றிகரமாக வெளியேற்றியமைதான். புலிகளுக்கு விசுவாசமான புதியவர்களுக்குப் பதிலாக இரா.சம்பந்தனுக்கு விசுவாசமான புதியவர்கள் அணி அந்த இடைவெளிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டது.

இரா.சம்பந்தன் உருவாக்கிய புதியவர்கள் அணியைச் சேர்ந்தவர்களின் முதல் தகுதி தமிழ் தேசிய அரசியல் வியாபாரிகளாக இருக்கவேண்டும் என்பதே ஆகும். அத்துடன், தமிழரசுக் கட்சியின் அரசியல் பாரம்பரியத்தை ஏற்றுக்கொள்பவர்களுக்கும், அதில் திளைத்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது.

**ஜெரா**

தொடரும்...




# சினி துளிகள்




## பல வருடங்களுக்குப் பிறகு நடிக்க வரும் நடிகை சுகன்யா



தமிழ் சினிமாவில் 80களில் கலக்கிய நாயகிகளில் ஒருவராக இருப்பவர் தான் நடிகை சுகன்யா.

புது நெல்லு புது நாத்து என்ற திரைப்படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகம் ஆன இவர் அப்படத்திற்காக பல விருதுகளையும் வாங்கி இருக்கிறார். பிறகு விஜயகாந்துடன் சின்ன கவுண்டர் திரைப்படத்தில் நடித்து முன்னணி நடிகையாக பிரபலமானார்.

தமிழை தாண்டி தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட பல மொழிகளிலும் நடித்த இவர் டப்பிங் கலைஞராக, இசையமைப்பாளராக, நடன கலைஞராகவும் தனது திறமைகளை காட்டியுள்ளார்.

சின்னத்திரையிலும் சன் டிவியில் ஒளிபரப்பான ஆனந்தம் சீரியலில் கதாநாயகியாக நடித்து ரசிகர்களை கவர்ந்தார். இவர் 2002ம் ஆம் ஆண்டு அமெரிக்காவை சேர்ந்த ஸ்ரீதர் ராஜகோபால் என்பவரை திருமணம் செய்திருந்தார், ஆனால் இருவருக்கும் கருத்து வேறுபாடு காரணமாக ஒரே வருடத்தில் பிரிந்தனர்.

நடிப்பு பக்கம் அவ்வளவாக தலை காட்டாமல் இருந்து வந்த சுகன்யா இப்போது நடிப்பில் களமிறங்கியுள்ளார். படங்களில் இல்லை சின்னத்திரையில் தான். விரைவில் ஒளிபரப்பாக போகும் புதிய தொடர் ஒன்றில் நடிக்க கமிட்டாகியுள்ளாராம் சுகன்யா. ஆனால் எந்த தொடர், தொலைக்காட்சி பற்றிய விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

## விஜயைத் தொடர்ந்து சூர்யா செய்யும் விஷயம்



நடிகர் விஜய் லியோ பட வெற்றிக்கு பிறகு தற்போது வெங்கட் பிரபு இயக்கத்தில் தளபதி 68 படத்தில் நடித்து வருகிறார். அந்த படத்தின் ஷூட்டிங் வேகமாக நடைபெற்று வருகிறது.

விஜய் இந்த படத்தில் சில காட்சிகளில் 19 வயது மாணவராக நடிக்கிறார் என்றும், அதற்காக பொடி ஸ்கேனிங் உள்ளிட்ட விஷயங்கள் செய்யப்பட்டு வருகிறது என்றும் தகவல் முன்பு வெளியானது நினைவிருக்கும்.

இந்நிலையில் சூர்யா அடுத்து சுதா கொங்கரா இயக்கத்தில் நடிக்க இருக்கும் சூர்யா 43 படத்தில் அவர் கல்லூரி மாணவராக நடிக்க இருக்கிறார் என தகவல் வெளியாகி இருக்கிறது.

அடுத்த வருட தொடக்கத்தில் ஷூட்டிங் ஆரம்பிக்க இருப்பதால் சூர்யா தனது உடலை கல்லூரி மாணவரை போல மாற்ற தீவிர பயிற்சியில் இருக்கிறார் என தெரிகிறது. விஜயைத் தொடர்ந்து சூர்யாவும் இப்படி நடிப்பது ரசிகர்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

## லோகேஷ் கனகராஜ் மாதிரி என்னால் பண்ண முடியாது



நடிகர் பிரபாஸ் நடிப்பில் பிரஷாந்த் நீல் இயக்கத்தில் உருவாகியுள்ள சலார் திரைப்படம் வெளியாக இருக்கிறது. இப்படத்தில் பிரபாசுடன் ஸ்ருதிஹாசன், பிரித்விராஜ், ஈஸ்வரி ராவ், சரண் ஆகியோர் முக்கியமான கதாபத்திரதில் நடித்துள்ளனர். கே.ஜி.எப் படத்தை போலவே, சலார் திரைப்படமும் இரண்டு பாகங்களாக உருவாக்கவுள்ளார்.

இந்நிலையில் பேட்டியொன்றில் பங்கேற்ற பிரசாந்த் நீல், சலார் திரைப்படத்தின் முதல் பாகத்தில் பிரபாஸ் மற்றும் பிரித்விராஜ் இருவரும் நண்பர்களாக நடித்துள்ளனர்.

இவர்களின் நட்புப் பயணத்தைத் தான் இரண்டு பாகங்களாக காட்டப் போகிறோம். சலார் படத்திற்கும் கே.ஜி.எப் படத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. கே.ஜி.எப் 1980 பீரியட்களில் இருப்பது போன்றது. இந்தப் படம் தற்போதைய காலகட்டத்தை வைத்து எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் சினிமாவில் லோகேஷ் கனகராஜ் படங்களை இணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார் என்று பிரஷாந்த் நீல் பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

## பிக் பாஸ்க்கு பின் கூல் சுரேஷ் கொடுத்த முதல் பேட்டி




பிக் பாஸ் 7ம் சீசன் வீட்டில் இருந்து கூல் சுரேஷ் எலிமினேட் ஆனார். வெளியில் வந்த பின்பு கூல் சுரேஷ் அளித்திருக்கும் முதல் பேட்டி இதோ.

பிரதீப் ஆன்டனி வெளியேற்றப்பட்டது பற்றி பேசிய கூல் சுரேஷ். "இப்படி ஒரு பெயர் எடுத்து வெளியில் வந்தது எனக்கு பெரிய அதிர்ச்சியாக இருந்தது. அதை நினைத்து கண்ணீர் விட்டேன்" என கூறி இருக்கிறார்.

அவர் மீது பெண்கள் சொன்ன குற்றச்சாட்டு உண்மையா பொய்யா என எனக்கு தெரியவில்லை என கூல் சுரேஷ் விளக்கம் கொடுத்திருக்கிறார். மாயாவுக்கு ஆதரவாக கமல் எப்போதும் பேசுகிறார் என வைக்கப்படும் விமர்சனம் பற்றி கேட்டதற்கு பதிலளித்த கூல் சுரேஷ் "உள்ளே இருந்து பார்க்கும்போது எங்களுக்கு அப்படி தெரியவில்லை. அவர் எப்போதும் கண்டிப்புடன் தான் பேசினார்" என தெரிவித்து உள்ளார்.

## சம்பளத்தை உயர்த்திய யோகி பாபு



நடிகர் யோகி பாபு தமிழ் சினிமாவில் டொப் கொமெடியனாக இருந்து வருகிறார். எல்லா முன்னணி நடிகர் படங்களிலும் யோகி பாபு தொடர்ந்து நடித்து வருகிறார். வாரிசு, ஜெயிலர், ஜவான் என இந்த வருடம் பல படங்களில் நடித்த அவர், ஹீரோவாகவும் பல படங்களில் நடித்துள்ளார்.

இந்நிலையில் தற்போது தெலுங்கில் யோகி பாபு அறிமுகம் ஆகிறார். மாருதி இயக்கத்தில் பிரபாஸ் அடுத்து நடிக்க இருக்கும் படத்தில் தான் யோகி பாபு நடிக்க இருக்கிறார். தமிழில் வாங்கும் சம்பளத்தை விட தெலுங்கில் அவர் மூன்று மடங்கு சம்பளம் வாங்குகிறாராம். அதனால் தான் மொழி தெரியவில்லை என்றாலும் தெலுங்கில் தைரியமாக களமிறங்குகிறார் என்றும் தகவல் வெளியாகி இருக்கிறது.

## விஜய் 68 படத்தில் இணைந்த சூப்பர் ஸ்டார்

வாரிசு, லியோ என அடுத்தடுத்து ஹிட் கொடுத்த விஜய், அடுத்து தளபதி 68 படத்தில் நடித்து வருகிறார்.

வெங்கட் பிரபு இயக்கம் இந்த படத்தில் மைக் மோகன், பிரஷாந்த், பிரபு தேவா, சினேகா, மீனாட்சி, இவானா, அஜ்மல், மாளவிகா ஷர்மா, யோகி பாபு, பிரேம்ஜி எனப் பல பிரபலங்கள் நடித்து வருகின்றனர்.

வாரிசு, லியோ திரைப்படத்தை போல தளபதி 68ம் படமும் மல்டி ஸ்டார்ஸ் படமாக உருவாகிறது.

தற்போது கிடைத்த தகவலின் படி, தளபதி 68 படத்தில் கன்னட சூப்பர் ஸ்டார் கிச்சா சுதீப் நடிக்கவிருப்பதாகவும், அதற்கான சந்திப்புகள் நடந்ததாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலும், ரணிலின் சர்வதேச விசாரணையும் - நடக்கப்போவது என்ன?

## பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்

**10.12.2023 வெளியாகிய நேர்காணலின் தொடர்ச்சி...**

**கேள்வி : பிரதேச வாதங்களை பேசுகின்ற ஒரு நிலை இன்று காணப்படுகின்றது. இந்த நேரத்தில் இன்றைய கிழக்கில் தமிழரசுக் கட்சியினது ஒற்றுமை எவ்வாறு இருக்கிறது?**

பதில் : அரசியல் கட்சிகளுக்கடையில் அடிக்கடி குழப்பங்கள் இருக்கும். போராட்டங்கள் என்று வருகின்றபோது ஒற்றுமை காணப்படுகிறது. சில குழப்பங்கள் வந்து போகிறது. இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கிளையின் தலைவர் பதவி என்பது மக்களால் நான் தெரிவு செய்யப்பட்டவன். யாரும் எனக்கு வழங்கவில்லை. அதாவது ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்டு வந்தவன். சாணக்கியனுக்கு பதவி வழங்குங்கள் என யாரும் கூறவில்லை. களுவாஞ்சிக்குடி வட்டாரக் கிளையில் தெரிவுசெய்யப்பட்டு, என்னுடைய பிரதேசமான மண்முனை தெற்கில் பிரதேச கிளைக்குத் தெரிவாகி, நான் வசிக்கும் பட்டிருப்பு தொகுதிக் கிளைக்குத் தெரிவாகி, பின்னர் மாவட்டக் கிளைக்குத் தெரிவு செய்யப்பட்டேன். ஆகையால் அது எனக்கு வழங்கப்பட்ட பதவி இல்லை.

கிழக்கினைப் பொறுத்த வரையில் தமிழரசுக் கட்சிதான் பிரதான கட்சி. கிழக்கில் இருக்கும் நிலைமையானது எங்களைப் பிரிப்பதற்கான பல சதிகள் நடைபெறுகிறது. ஜனாதிபதி ரணில் அவர்களது தந்திரம் பிரித்தாளுவது என்பது உங்களுக்குத் தெரியும். தேவையான நேரம் DTNA பின்னர் TNA என்பார்கள். இதன் ஊடாக எல்லாம் ஒற்றுமைக்குப் பாதிப்பு வரும். ஆனால் ரணில் அவர்கள் தந்திரமாக சில சலுகைகளை வழங்கி அதாவது நான் அறிந்த வகையில் சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பார் பேர்மிற் வழங்கியுள்ளதாக நான் அறியக்கூடியதாக இருந்தது.

மட்டக்களப்பில் போராட்டக் களங்களைப் பார்த்தால் ஒரு சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களைக் காண முடியாதுள்ளது. ஜனாதிபதிக்கு எதிராக அல்லது அரசுக்கெதிரான சில பிரேரணைகள் பாராளுமன்றில் வருகின்றபோது எப்போது எதிராக வாக்களித்தோம் என்கிற விபரங்கள் எதுவும் சிலருக்குத் தெரியாமல் இருக்கிறது. சுகாதார அமைச்சின் பிரேரணை ஒன்று வருகின்றபோது ஒரு கட்சியின் ஒரு உறுப்பினர் எதிராக வாக்களிக்கிறார் மற்றைய உறுப்பினர் ஓய்வு அறையில் தூங்கிக்கொண்டிருக்கிறார்.

வவுனியாவில் கரும்புச் செய்கைக்காக நிலம் ஒதுக்கிக் கொடுத்த விடயத்தில் அந்த குறிப்பிட்ட தனியார் நிறுவனத்தின் முக்கிய பதவியில் கட்சி ஒன்றின் பேச்சாளர் இருக்கிறார். வடக்கும் கிழக்கும் இணைந்ததுதான் தமிழர் தாயகம் என்கிற ரீதியில் நாம் ஒற்றுமையாக வேலைத்திட்டங்களைச் செய்கையில், சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறான சலுகைகளை வழங்கி சர்வதேச ரீதியாக தமிழ் மக்களுக்கு இருக்கும் செல்வாக்கினையும் வீழ்ச்சி காணவைக்கும் வேலைத்திட்டமா இது என்பது தெரியாமல் இருக்கிறது. இருந்தாலும் மக்கள் தெளிவாக இருப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

என்னைப் பொறுத்தளவில் கிழக்கு மாகாணத்தில் நாங்கள் பலமாக இருக்கிறோம். தொல்பொருள் திணைக்களத்தை வைத்து மக்களை சித்திரவதை செய்வது, எங்களுடைய காணிகளை அபகரிப்பு செய்வது, மயிலத்தமடுவில் அண்மையில் கூட பண்ணையாளர்களின் சிறு சிறு குடில்களை எரித்திருக்கிறார்கள். 07 இலட்சம் மாடுகளை எங்கே மேய்ச்சலுக்குக் கொண்டுசெல்வது என்பது தெரியாமல் இருக்கிறார்கள். இவற்றை எல்லாம் நன்கு அவதானித்து தமிழ் மக்கள் அடுத்த தேர்தலில் வாக்களிப்பார்களாகவிருந்தால் கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சிக்கு பாரிய வெற்றி கிடைக்கவேண்டும்.

ஆனால் நான் முன்பு கூறியதைப்போல தேர்தல் காலங்கள் வந்தவுடன் உதாரணத்திற்கு வீதியொன்று மிக மோசமாக இருக்கிறதென்றால் அந்த பாதைக்கு மண் போட்டு வீதியை செப்பனிடுவது. மக்களுக்கு ஒரு நன்றிக்கடன் இருக்கிறது. சலுகைகளை மக்களுக்கு வழங்குவது போன்ற வேலைகளைச் செய்வது. மக்களிடமிருந்து கொள்ளை யடிக்கப்பட்ட பணத்தினைத் தான் மீண்டும் தேர்தல் காலங்களில் மக்களிடம் வழங்குகிறார்கள். 05 வருடங்களாக கொள்ளையடித்ததை வழங்குகிறார்கள். மட்டக்களப்பில் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அரச தரப்பிலுள்ளவர்கள் வாய்திறக்க மறுக்கிறார்கள். ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் இருந்து, தான் எவ்வாறு தப்பலாம் என்று தான் அவர்களால் சிந்திக்க முடியுமே தவிர, பண்ணையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கதைக்க முடியாமல் இருக்கிறது.

**கேள்வி : சாணக்கியனுக்கும் காணிகள், சொத்துக்கள் பல இருப்பதாக பிள்ளையான் அவர்கள் கூறியிருந்தாரே?**

பதில் : சாணக்கியனுக்கும் காணிகள் இருக்கிறது. என்னுடைய பாட்டனார், தந்தையாரை எனது குடும்பத்தை நன்கு தெரிந்தவர்களுக்குத் தெரியும். இராசமாணிக்கம் என்கிற எனது பாட்டனார் அரச சேவையில் இருந்தவர். அவரது மனைவிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் சொத்துக்கள் இருந்தன. நானும் எனது பணத்தைக் கொடுத்து காணி வாங்கியிருக்கிறேன். அதற்குச் சரியான ஆவணங்கள் இருக்கின்றன. நானும் கொடுத்திருக்கிறேன். அதற்காக நான் அரச காணிகளை அடாத்தாக பிடித்துவைத்திருப்பதாக பிள்ளையான் அவர்கள் பொய்யான குற்றச்சாட்டுக்களைக் கூறி, கொழும்பில் இருந்து குழுவொன்று வந்து ஆராய்ந்து அவை அரச காணிகள் அல்ல என அறிக்கையும் வழங்கியிருக்கிறார்கள். உங்களுக்குச் சந்தேகம் மேலும் இருப்பின் அரச அளவையாளர்களைக் கொணர்ந்து அளந்துபார்க்குமாறு நான் கூறியிருந்தேன். அவர்கள் இதுவரை வரவில்லை. ஏனென்றால் அவர்களுக்குத் தெரியும் இவை அரச காணி அல்ல என்பது. என்னுடைய சொத்து விபரங்களை நான் பாராளுமன்றுக்கு நிரப்பிக் கொடுத்துள்ளேன். எங்களுக்கு இருக்கின்ற காணிகளை நான் ஏன் ஒழிக்கவேண்டும். நாங்கள் இன்னொருவருக்குச் சொந்தமான வீட்டில் கள்ள உறுதி முடித்து வாழ்கிறோமா? அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளை பிடித்து காடழித்து குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கி யிருக்கிறோமா?, வளங்களை அழித்திருக்கிறோமா? நாங்கள் அப்படி எதுவும் செய்யவில்லை. சொந்தமாக உழைப்பில் வரி செலுத்தி வாங்க நாங்கள் ஏன் பயப்படவேண்டும்.

**கேள்வி : அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் எப்போது பார்த்தாலும் சாணக்கியன், பிள்ளையான், வியாழேந்திரன் இவர்களுக்கிடையில் பிரச்சினைகளையே நாங்கள் பார்க்கிறோம்?**

பதில் : மக்களுடைய பிரச்சினை என்ன செய்வது. ஒரு விடயத்தினை கதைக்க வருகின்றபோது பிரச்சினை வருகிறது. மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற முன்னர் திட்ட பணிப்பாளர் தொலைபேசியில் எங்களை அழைப்பார். 01ம் திகதி மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் இருக்கிறது. பிரதேச மட்டத்தில் தீர்க்கப்படாத மக்களது பிரச்சினைகளை நீங்கள் எங்களுக்கு அனுப்பிவையுங்கள் எனக் கேட்பார்கள். நாங்கள் இருக்கின்ற பிரச்சினைகளைப் பட்டியலிட்டு அனுப்பி வைப்போம். மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பத்து பிரதேச செயலகங்கள் இருக்கிறது. இதில் 05 பிரதேச செயலக கூட்டங்களுக்கு வியாழேந்திரனும், ஏனைய 05 பிரதேச செயலக கூட்டங்களுக்கு பிள்ளையானும் தலைவர். இவர்கள் இருவரும் மாறி மாறி தீர்மானங்களை எடுப்பார்கள். அவர் A என்கிறபோது மற்றையவர் B என்பார். ஆகையால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. நான் மாத்திரம் தான் இந்த பத்து கூட்டங்களுக்கும் செல்பவன். தீர்க்கப்படாத விடயங்களை நாங்கள் எழுத்து மூலம் கொடுப்போம். கூட்டத்திற்கு வந்தவுடன் வழங்கப்பட்ட பிரச்சினைகளைப் பார்தால் ஏழு விடயங்கள் பிள்ளையான் களவு எடுத்த விடயங்களாக இருக்கலாம். 06 விடயங்கள் வியாழேந்திரன் சம்பந்தப்பட்ட விடயங்களாக இருக்கலாம். 03 விடயங்கள் உண்மையில் இருவருக்கும் தொடர்பில்லாத பொதுவான விடயங்களாக இருக்கலாம். அந்த மூன்று விடயங்களைத் தான் சாணக்கியன் அனுப்பிய தீர்க்கப்படாத விடயங்களாக காட்டுவார்கள். ஏனைய விடயங்கள் குறித்துக்கேட்டால் நான் தான் இங்கு DCC தலைவர். நான் தெரிவுசெய்கின்ற விடயங்கள் தான் இங்கு எடுக்கப்படும் என்பார்கள். இதற்குள் சண்டைகள் வந்துவிடும்.

அடுத்த கூட்டத்திற்குப் போனால் அங்கு கடந்த கூட்டத்திலும் இதுதான் பிரச்சினை என்று நாங்கள் கூறினோம் என மக்கள் என்னிடம் கூறுவார்கள். வாக்குவாதம் வரும் என்பதற்காக பிள்ளையானுக்குத் தேவையான 03 விடயங்களை மாத்திரம் பேசிவிட்டு வீட்டுக்குப்போவதா? இவை மக்களது பிரச்சினைகள். என்னுடைய தனிப்பட்ட வீட்டுப் பிரச்சினைகள் இல்லையே. தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்ந்தும் தீர்க்கப்படாத பிரச்சினைகளாகவே இருக்கின்றன. அண்மையில் கிழக்கு மாகாண ஆளுநர் ஒரு விடயத்தைச் சொல்கின்றபோது அவருக்கே, இல்லை இல்லை. நான் தான் தலைவர். என்னுடைய பணிப்பினை மீறி செய்யக்கூடாது என்பதும் அதிகாரிகளை அச்சுறுத்துவதும். ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் தொடர்பு டையவர்கள் கொலைகாரர்கள் என்கிறபோது மக்களும் அதிகாரிகளும் பயப்படுவார்கள் தானே.

**கேள்வி : இதற்கான மாற்று நடவடிக்கைகள் குறித்து நீங்கள் சிந்திக்கவில்லையா?**

பதில் : உதாரணத்திற்கு, கிராம மட்டத்தில் பிரச்சினை ஒன்று இருக்கிறது. மயிலத்தமடு - மாதவனை பிரச்சினையை எடுப்போம். இந்தக் கிராமத்தின் பிரதேச செயலாளரைச் சந்திக்கின்றேன். அவர் கூறுவார் இதனை என்னுடைய மட்டத்தில் தீர்க்க முடியாது. இதனை பிரதேச செயலாளரிடம் தான் கதைக்கவேண்டும் என்று. பிரதேச செயலாளரைச் சந்தித்தால் அவர் கூறுவார் இதனை என்னுடைய மட்டத்தில் தீர்க்க முடியாது மாவட்ட அரச அதிபரிடம் தான் கதைக்கவேண்டும் என்று. அவரிடம் சென்றால் அவர் கூறுவார் அமைச்சிடம் தான் கதைக்கவேண்டும் என்று. அமைச்சின் செயலாளர் அமைச்சரிடம் கதைக்கவேண்டும் என்பார். அமைச்சரிடம் கதைத்தால் ஜனாதிபதியிடம் தான் கதைக்கவேண்டும் என்பார். அண்மையில் பிரதமர் மட்டக்களப்புக்கு வந்தபோது 13 விடயங்களை உள்ளடக்கிய கோப்பு ஒன்றினை அவரிடம் வழங்கினேன். இதுவரைக்கும் விசாரணையும் இல்லை ஒரு கேள்வியும் இல்லை. ஏனென்றால் அனைவரும் ஒரே கூட்டுக்களவானிகள் தானே. ஜனாதிபதியிடம் கூறினால் அவரும் கவனிப்பதில்லை. வேடிக்கையாக பதில் வழங்குகிறார். பிரச்சினைக்குத் தீர்வினைப்பெற்றுத்தரவேண்டியமேல் மட்டங்களே இன்று கவனக்குறைவாக இருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சரி, தமிழரசுக் கட்சியும் சரி ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்றால் நாம் மக்களது பிரச்சினைகளைக் கூறுகின்றோம். இதில் ஒரு சிலர் பார் பேர்மிற் வேணும் என்றால் அது இலகுவாகச் செய்யக்கூடிய விடயம். காணாமல் ஆக்கப்பட்டோருக்குத் தீர்வு வேணும் என்று கேட்டால் அது முடியாது. சர்வதேச சமூகம், இராணுவம், பொலிஸ், மஹிந்த, கோட்டாபய என்று வரும். ஆனால் பார் பேர்மிற்றினை கேட்கின்றபோது அதனை ஜனாதிபதியின் மட்டத்திலே செய்யலாம் அல்லவா.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**

# தமிழ் காங்கிரஸ் X தமிழரசுக் கட்சி

கடந்தவாரத் தொடர்ச்சி...

இந்த இரு இனங்களின் தேர்தல் மைய அரசியல் போக்குகளின் காரணமாக பௌத்த சிங்கள உணர்வுக்கு எதிர் தமிழ் உணர்வு அல்லது தமிழ் உணர்வுக்கு எதிர் சிங்கள தேசிய உணர்வு எனும் இனவாதப் போக்கு வளர்க்கப்பட்டது. அதாவது சிங்கள இனவாதத்தைக் காட்டி தமிழ் இனவாதமும் தமிழ் இனவாதத்தைக் காட்டி சிங்கள இனவாதமும் வளர்க்கப்பட்டது.

முன்பு சுட்டிக்காட்டியது போல தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது எந்தவொரு தேசிய இனங்களின் உரிமைகளுக்கும் எதிரானது அல்ல என்கின்ற தத்துவார்த்தம் இலங்கையில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை விடயத்தில் தவறிப்போனதற்குக் காரணம் இந்தத் தேர்தல் மைய அரசியலேயாகும்.

**சிங்களம் மட்டும் அரச கரும மொழியாதல்**

ஆரம்பத்தில் சிங்கள வர்களுக்குரிய வாய்ப்புக்களையும் உரிமைகளையும் பறிப்போர்களாக மலையாளிகள், போரா சமூகத்தவர், கரையோர முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என்போரே காணப்பட்டனர். சிங்கள மத்தியதர வர்க்கத்தினரின் தாக்குதல்களுக்கு உள்ளானவர்களும் இவர்களேயாவர். சிங்களவர்கள் இலங்கைத் தமிழரை இந்த நாட்டின் பூர்வீக சமூகமாகவே பார்த்தனர். இதன் காரணத்தினால்த்தான் சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் அரச கரும மொழியாக இருக்க வேண்டும் என்பதில் சிங்களத் தேசியவாதிகளும், இடதுசாரிகளும் ஒருமித்த கருத்துடையவர்களாகவே இருந்திருக்கின்றனர்.

*"1944இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன, சிங்களம் 'சில வருடகாலத்துள்' அரச கரும மொழியாக்கப்படவேண்டும் எனப் பிரேரித்தார். இதனுடன் தமிழ்மொழியும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் எனப் பிரேரணை திருத்தப்பட்டு ஆதரவாக 27 வாக்குகளும் எதிராக 2 வாக்குகளும் பெற்றது." 1944 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா பின்வருமாறு கூறினார், "இவ்விரு மொழிகளும் அரச கரும மொழியாகக் கொள்வதில் எனக்கு எத்தகைய தனிப்பட்ட எதிர்ப்பும் கிடையாது. இதனால் எத்தகைய தீங்கோ, அபாயமோ, இடர்பாடோ ஏற்படும் என்று நான் கருதவில்லை." 1951 இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா யூ.என்.பியிலிருந்து பிரிந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நிறுவியபோது மொழிப் பிரச்சினையில் செயலாற்ற யூ.என்.பி தாமதம் செய்கிறது எனக் குற்றஞ்சாட்டினார். அன்னாரின் முதற் கட்சி அறிக்கை பின்வருமாறு கூறியது, "சிங்களத்தையும் தமிழையும் உடனடியாக அரச கரும மொழிகளாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் இந்நாட்டு மக்கள் தமது சொந்த நாட்டிலேயே அந்நியராக இருக்கும் நிலை ஒழியும். இது சிங்களம் மூலமும் தமிழ் மூலமும் கல்வி கற்றோர் இன்று வாழ்க்கையின் கடைநிலையில் இருப்பதற்கும் முடிவு கட்டலாம்" (குமாரி ஜயவர்த்தன) என்றார்.*

இவ்வாறு எல்லாத் தலைவர்களும் சிங்களத்தையும் தமிழையும் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொண்டு அவற்றை அரச கரும மொழிகளாக அமுல்படுத்த வேண்டும் என்ற நிலையிலிருந்தவர்கள் தமிழை ஒதுக்கி தனிச் சிங்களம் மட்டுமே என்ற நிலைக்கு எவ்வாறு வந்தார்கள் என்று நோக்குதல் வேண்டும். *"இங்கு ஒரு விசயத்தை நாம் கவனிக்கவேண்டும். பல நாடுகளில் சிறுபான்மையினர் தம் மொழி உரிமைகளை அல்லது மற்ற உரிமைகளை பெரும்பான்மையிலிருந்து பாதுகாக்கப் போராடுவது வழக்கம். ஆனால் இலங்கையில் ஒரு சிறுபான்மை தன்னை ஆபத்துக்குள்ளாக்கும் என்று அஞ்சி ஒரு பெரும்பான்மை அதன் மொழியைப் பாதுகாக்கப் போராட்டம் நடத்தியது. இந்தச் சிக்கலான பிரச்சினையை நாம் புரிந்துகொள்ள நாம் சிங்களப் பெரும்பான்மை ஏன் ஒரு சிறுபான்மை போல் நடந்து கொண்டது என்பதற்கான பிரத்தியேக காரணங்களை ஆராயவேண்டும்." (என்.சண்முகதாசன்)*

*1822ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 42 அமெரிக்க மிசன் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தன. 1823ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் செமினறி ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப் பட்டது. இதுவே ஆசியாவில் முதலாவது ஆங்கிலப் பாடசாலை எனக் கூறப்படுகின்றது. இதில் ஆங்கிலம், தமிழ், கிரேக்கம், லத்தீன் ஆகிய மொழிகளும் கணிதம், புவியியல், வரலாறு, தத்துவவியல் ஆகிய பாடங்களும் ஒரு பல்கலைக்கழகத்தின் தரமுடையதாக கற்பிக்கப்பட்டதுடன் மாணவர்கள் விடுதியில் தங்கிப் படிப்பதற்கான வசதிகளும் இருந்தன. 1920ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 65 ஆங்கிலப் பாடசாலைகள் இருந்தன. அவற்றில் 10 முதல்தர கல்லூரிப் பாடசாலைகளாகும். யாழ்ப்பாணத்தில் இருந்த 426 தமிழ் பாடசாலைகளில் கூட தரமான ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது.*

*இலங்கையில் வேறு எங்கும் இல்லாதளவுக்கு யாழ்ப்பாணத்தில் கல்வி வாய்ப்பு இருந்ததன் காரணத்தினால் பிரித்தானியரின் நிர்வாக மொழியான ஆங்கிலத்தில் கடமையாற்றக் கூடியவர்களாகவும் அந்தக் கடமையின் நிமித்தம் இலங்கையின் எந்தப் பாகத்திலும் சென்று பணிப்புரியக் கூடியவர்களாகவும் யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கத்தினர் இருந்தனர். இந்த மத்திய வர்க்கத்துக்குள் யாழ்ப்பாண சமூக அமைப்பின் உயர்நிலைச் சாதியினரே இருந்தனர். தாழ்த்தப்பட்ட சமூகங்களுக்கான கல்வி வாய்ப்புக்கள் 1960 ஆண்டுக்குப் பின் கூட மறுக்கப்பட்டு வந்திருப்பதை கவனத்தில் கொள்தல் வேண்டும்.*

*1921ம் ஆண்டு 20 வயதுக்கு மேற்பட்ட மொத்த சிங்களவர் 790,954 பேரில் 987 பேரே அரச வேலைவாய்ப்பைப் பெற்றிருக்க அதே ஆண்டு 20 வயதுக்கு மேற்பட்ட மொத்தத் தமிழர்கள் 139,361 பேரில் 684 பேர் அரச வேலைவாய்ப்பைப் பெற்றிருந்தனர். இது தமிழர்களின் சனத்தொகை விகிதாசாரத்திலும் பார்க்க அதிகூடிய எண்ணிக்கையாகும். இந்த ஆங்கிலம் கற்ற வர்க்கத்தினரே உயர் நிர்வாகப் பதவிகளை வகித்ததோடு ஏனைய பதவிகளில் ஆட்சேர்ப்பிலும் அவர்களுடைய செல்வாக்கே காணப்பட்டது. சுதந்திரத்துக்குப் பின்பும் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தின் காரணமாக சிங்கள மொழி மூலம் கல்விகற்ற சிங்கள அறிவுஜீவிகள் கௌரவமான பதவிகளில் ஓரங்கட்டப்படுவதனால் பாதிப்புக்குள்ளானார்கள்.*

*இதனால் அவர்கள் சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அப்போதுதான் அவர்களால் அரச சேவைகளில் இணைந்து கௌரவமான தொழில்களையும் நல்ல வருமானத்தினையும் பெறலாம் என்று எதிர்பார்த்தார்கள். இந்த எதிர்பார்ப்பு சாதாரண சிங்கள தொழிலாளர்களிடத்திலும் விவசாயிகளிடத்திலும் உருவாகவில்லை. அவர்கள் இன்னும் இலவசக் கல்வியின் பயனைப் பெற்றவர்களாக மேற்கிளம்பவில்லை. இதே நிலை தான் கிழக்கு மாகாணத்திலும் வடமாகாணத்தில் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களிடத்திலும் இருந்த நிலைமையாகும்.*

*எனவே சாதாரண சிங்களத் தொழிலாளரும் சரி, தமிழ்த் தொழிலாளரும் சரி ஒரு மொழியை மற்றவர் ஒதுக்குவதற்கான தேவையுடையவர்களாக இருக்கவில்லை. ஆனால் இவ்விரு இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்களுடைய பிள்ளைகள் கல்வி கற்கும் தாய்மொழியில் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுமாக இருந்தால் அதன் மூலம் தமது பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்ல நிலைக்கு வருவர் என்ற எதிர்பார்ப்பு காணப்பட்டிருக்கிறது. இந்த எதிர்பார்ப்புக் காரணமாக தங்கள் தாய்மொழிக்கான ஆதரவினை அவர்கள் வழங்கியிருந்தனர். இந்த ஆதரவுத் தளத்தினை கட்டியெழுப்புவதில் நான்கு வகையான குட்டி பூர்ஷுவாக்கள் செல்வாக்குச் செலுத்தியதாக குமாரி ஜயவர்த்தன சுட்டிக்காட்டுகின்றார்.*

*அந்தவகையில்,*

*ஆசிரியர்கள்: சிங்கள ஆசிரியர்கள் பலரைப் பேட்டி கண்ட ஹவாட் றிக்கின்ஸ் அவர்களுடைய கருத்தின் பிரகாரம் "சிங்களம் அரசகரும மொழியாக்கப்படின் தற்போதைய வசதியீனங்களில் பல மறைந்து விடும். ஆங்கிலம் அரசகரும மொழியாக இருக்கும் வேளை அதற்கு வழங்கப்பட்ட அந்தஸ்து அனைத்தும் சிங்கள மொழிக்கும் சிங்கள ஆசிரியர்களுக்கும் கிடைக்கும். அவர்கள் சிங்கள மொழியிலும் கலாசாரத்திலும் உயர்ந்தவர்கள், அவர்களது திறமை அரசின் அங்கீகாரம் பெறின், அவர்களும் அந்தஸ்த்தில் உயர்வர், சிங்களம் அரசகரும மொழியானால் சம்பள வேறுபாடு, கல்வி வசதிகள், தொழில் வாய்ப்புக்கள் ஆகியன ஆங்கிலம் பேசும் உயர் வகுப்பினருக்கு மாத்திரம் உரித்தாகமாட்டாது. ஆங்கிலத்தின் இடத்துக்கு சிங்களம் முன்னேற்றப்படின் பெருந் தொகையான அரச பதவிகள் கிராமத்தில் கற்கும் மாணவர்களுக்கு உடனடியாகக் கிடைக்கும்" (மேற்கோள், குமாரி ஜயவர்த்தனா) என நம்பினார்கள்.*

*மாணவரும் இளைஞரும்: சிங்கள மொழிமூலம் கல்விகற்று ஆங்கில ஆதிக்கத்தினால் ஓரங்கட்டப்பட்டு வேலையற்றிருந்த இளைஞர்களும் இலவசக் கல்வியினூடான வாய்ப்பைப் பயன்படுத்தி சிங்கள மொழிமூலம் கல்வி கற்றுக்கொண்டிருந்த மாணவர்களும் 'சிங்களம் மட்டும்' அமுல்படுத்தப்படுமாயின் தங்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் என நம்பியதால் சிங்களம் மட்டும் கொள்கையை தீவிரமாக ஆதரித்தனர்.*

*ஆயுர்வேத வைத்தியர்கள்: சிங்களப் பண்பாட்டில் ஆயுர்வேத வைத்தியத்திற்கும் அதனைச் செய்கின்ற வைத்தியர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் இருந்தன. ஆங்கிலக் கல்வியும் ஆங்கிலமருத்துவமும் அவர்களுடைய அந்தஸ்தைக் குறைத்தன. சிங்களம் அரச கரும மொழியாக அமையப்பெற்றால் தங்களுடைய பாரம்பரிய வைத்தியமும் சிங்கள பண்பாடும் உயிர்ப்புப் பெறும் என நம்பினர். இதனால் சிங்கள மொழிக் கொள்கையை வலியுறுத்தினர்.*

*புத்த மதகுருமார்: இவர்கள் சிங்களம் மூலம் கல்வி கற்று பண்டைய சிங்கள இலக்கியங்களையும் பாளி மொழியையும் படித்திருந்ததோடு இவர்களே சிங்கள பண்பாட்டின் காவலர்கள் எனும் ஒரு எண்ணப்பதிவும் சிங்கள மக்களிடம் உண்டு. இவர்கள் ஆங்கிலம் பேசும் நிர்வாக அதிகாரிகளினால் ஓரங்கட்டப்பட்டனர். சிங்களம் அரச கரும மொழியாக வரும் பட்சத்தில் தாங்கள் இழந்த பாரம்பரியத்தினை மீட்டெடுக்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் சிங்கள மொழிக்கொள்கையை தீவிரமாக முன்னெடுத்தனர்.*

*எனவே இங்கு தமிழ் இனத்தின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியினாலன்றி, தமிழர்கள் கொண்டிருக்கும் ஆங்கிலத் திறன் காரணமாக தங்களுக்குரிய வேலைவாய்ப்புக்கள் மறுக்கப்படுவதாக உணர்ந்த சிங்கள மத்தியவர்க்கத்தினர் ஆங்கிலம் இருந்த இடத்தில் சிங்களத்தைக் கொண்டு வருவதன் மூலம் அந்த வேலைவாய்ப்புக்களை தாம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு தமது பண்பாட்டையும் பாரம்பரியங்களையும் கட்டியெழுப்ப முடியும் என்று நினைத்தனர்.*

*எந்த ஒரு தேசிய இனத்தின் அடையாளமாகவும் அந்த தேசிய இனத்தின் உயிர்ப்பின் மையமாகவும் மொழி இருக்கின்றது. சிங்கள மக்கள் தங்கள் மொழி மீது கொண்டுள்ள நியாயமான அக்கறையினை அரசியல் கட்சிகள் தங்கள் கட்சிக்கான ஆதரவுத் தளமாக கையாளத் தொடங்கின. எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா, யூ.என்.பியிலிருந்து 1951இல் பிரிந்தவுடன் தனது முதலாவது அறிக்கையிலே மொழிப் பிரச்சினையில் செயலாற்ற யூ.என்.பி தாமதம் செய்கிறது என குற்றஞ்சாட்டி தனக்கான ஆதரவுத் தளத்தினை கட்டியெழுப்ப வேண்டியவராக இருந்தார். இதற்கு ஏற்றாற்போல் இடைக்காலப்பிரதமராக இருந்த சேர்.ஜோன் கொத்தலாவல யாழ்ப்பாணத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் மகிழ்ச்சியடைந்து அரசியல் சட்டத்தில் சிங்கள மொழி, தமிழ் மொழி ஆகியவற்றுக்கு சம அந்தஸ்து அளிக்கும் வண்ணம் நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்தார்.*

**தொடரும்...**

**சுந்தரப்பிள்ளை சிவரெத்தினம்**

# ஊடகவியலாளர்கள் 44 பேர் அரச பயங்கரவாதத்தால் படுகொலை

**கடந்தவாரத் தொடர்ச்சி...**


*38. பெயர் : ராஜ்குமார் டெனிசே*
*தொழில் : ஊடகப் பணியாளர்*
*கொலை செய்யப்பட்டது : 09 ஏப்ரல், 2009, முல்லைத்தீவு.*
கூடுதல் கருத்துக்குறிப்பு : கணினி வரைகலை வடிவமைப்பாளரான இவர் ஈழநாதம் தமிழ் நாளிதழில் பணிபுரிந்து வந்தார். இலங்கை ராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் பொக்கணைப் பகுதியில் கணவருடன் இவர் உயிரிழந்தார்.

*39. பெயர் : ஜெயராஜா சுசித்ரா (சுகந்தன்)*
*தொழில் : ஊடகப் பணியாளர்*
*கொலை செய்யப்பட்டது : 25 ஏப்ரல், 2009, முல்லைத்தீவு*
கூடுதல் கருத்துக்குறிப்பு : ஈழநாதம் நாளிதழின் அச்சு இயந்திரம் இயக்குபவராக இவர் பணிபுரிந்தவர். வலைஞர்மடம் பகுதியில் இலங்கை ராணுவத்தின் குறிபார்த்து சுடும் படையினர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

*40. பெயர் : மாரியப்பு அந்தோனிகுமார்*
*தொழில் : ஊடகப் பணியாளர் / பத்திரிகையாளர்.*
*கொலை செய்யப்பட்டது : 14 மே, 2009, முல்லைத்தீவு.*
கூடுதல் கருத்துக்குறிப்பு : நாளிதழ் விநியோகிப்பாளராகவும், கடை உரிமையாளராகவும் இருந்த இவர், ஈழநாதம் தமிழ் நாளிதழின் செய்தியாளராகவும் பணியாற்றினார். போரின் இறுதிநாட்கள் வரை உயிர் வாழ்ந்த இவர், முள்ளிவாய்க்கால் பகுதி பதுங்கு இருப்பிடத்தில் இருந்து வெளியே வர முயன்றபோது ராணுவத்தின் ஆர்.பி.ஜி தாக்குதலில் கொல்லப்பட்டார்.

*41. பெயர் : துரைசிங்கம் தர்ஷன்*
*தொழில் : ஊடகப் பணியாளர்*
*கொலை செய்யப்பட்டது : 14 மே, 2009, முல்லைத்தீவு.*
கூடுதல் கருத்துக்குறிப்பு : ஈழநாதம் நாளிதழின் கணினி வரைகலை வடிவமைப்பாளராக இவர் வேலை பார்த்தார். போரின் இறுதிநாட்களின்போது முள்ளிவாய்க்கால் பகுதி பதுங்கு இருப்பிடத்தில் இருந்து இவர் வெளியே வர முயன்றபோது, இன்னொரு ஊடகப்பணியாளருடன் சேர்ந்து இவர் ராணுவத்தின் ஆர்.பி.ஜி தாக்குதலில் பலியானார்.

*42. பெயர் : இசைப்பிரியா*
*தொழில் : பத்திரிகையாளர்*
*கொலை செய்யப்பட்டது : 18 மே, 2009, முல்லைத்தீவு.*
கூடுதல் கருத்துக்குறிப்பு : தமிழ்ப் போராளிகளின் தொலைக்காட்சி நிலையத்தில் இவர் நிகழ்ச்சிகளை வழங்குபவராகப் பணியாற்றியவர். போரின் இறுதிக்கட்டத்தின் போது இவர் ராணுவத்திடம் சரணடைந்தவர். எனினும் இவர் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகி அதன்பின் படுகொலை செய்யப்பட்டதாக பலரால் நம்பும் நிலை ஏற்பட்டது. இதற்கான புகைப்பட ஆதாரங்கள் பின்னர் வெளிவந்தன.



*43. பெயர் : திருகுலசிங்கம் தவபாலன்*
*தொழில் : பத்திரிகையாளர் / அரசியல் செயற்பாட்டாளர்.*
*கொலை செய்யப்பட்டது : மே, 2009, (திகதியை உறுதிப்படுத்த முடியவில்லை) முல்லைத்தீவு.*
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர் போராளிகளின் வானொலி நிலையத்தில் சேவையாற்றியவர். திறமை மிக்க புகைப்படக்காரராக அறியப்பட்டவர். போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை ராணுவத்திடம் சரணடைந்த இவர், படுகொலை செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது. இவரது வாழ்வின் இறுதிக் கணங்கள் பற்றி எதுவும் தெரியவில்லை. உறுதிப்படுத்த முடியவில்லை.

*44. பெயர் : பிரகீத் எக்னெலிகொட*
*தொழில் : பத்திரிகையாளர் / அரசியல் செயற்பாட்டாளர்*
*கொலை செய்யப்பட்டது : 24 ஜனவரி, 2010, கொழும்பு.*
கூடுதல் கருத்துக்குறிப்பு : இவர் லங்கா இ நியூஸ் என்ற இணையதளத்தில் கேலிச்சித்திர ஓவியராகவும், அரசியல் விமர்சகராகவும் பணிபுரிந்தவர். வேலை முடிந்து வீட்டுக்கு திரும்பும் வழியில் இவர் காணாமல்போனதாக அறிவிக்கப்பட்டது.
இலங்கையில் இருந்து செயல்படும் சுதந்திர ஊடக இயக்கம் (FMM) எனப்படும் ஃபிரீ மீடியா மூவ்மெண்ட் அமைப்பு 'பத்திரிகையாளர்களுக்கு எதிராக நடந்த குற்றச் செயல்களுக்காக ஒரே ஒருவர் கூட குற்றவாளியாக்கப்படவில்லை' என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது.

"இலங்கை அரசு எதிர்ப்புக்குரல் எழுப்புபவர்களையும், சுதந்திர ஊடகத்தையும் படுகொலை செய்கிறது", 'குற்றங்கள் செய்துவிட்டு அதற்கு தண்டனை எதுவுமின்றி தப்புவதே, நீண்ட பல ஆண்டுகளாக உள்ள ஒரு பிரச்சினை' என்று இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதர் ராபர்ட் பிளேக் தெரிவித்திருந்தார். 'அவர்கள் எப்போதுமே விசாரணை செய்யப் போவதாகச் சொல்வார்கள். ஆனால் எதுவுமே நடக்காது', அமெரிக்க அரசுத்துறை இந்த கொலைகளைக் கண்டிக்கிறது. இலங்கை அரசின் விசாரணையை வேண்டுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஊடக சுதந்திரத்தில் பெரும் பங்களிப்பு செய்யும் ஒருவருக்கு யுனெஸ்கோ நிறுவனம் 'கிலெர்மோ கானோ உலக பத்திரிகை சுதந்திர விருது' என்ற விருதை வழங்கி வைக்கிறது. இவ்விருதானது கொலம்பிய பத்திரிகையாளர் கிலெர்மோ கானோ இசாஸாவின் நினைவாக வழங்கப்படுகிறது. இவர் 1986 டிசம்பர் 17ம் திகதி தனது அலுவலகம் முன்பாக வைத்து படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையை பொறுத்த வரையில் பத்திரிகை சுதந்திரம் என்பது வாய்ப்பேச்சளவில் கூட இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை. ஒரு சம்பவம் நடந்தால் அச்சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று உண்மையை ஆராய்ந்து ஆதாரங்களை திரட்டி அதன்பின் செய்தியை வெளியிடுவதே ஊடக தர்மமாகும். அந்நிலையானது இலங்கையில் பெரும்பாலும் இல்லை என்று தான் சொல்லவேண்டும். ஆட்சியாளர்களின் அடக்குமுறையில் உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிடும் ஊடகங்கள் மாத்திரமே எவ்வித இச்சுறுத்தலும் இன்றி இயங்க முடிகிறது. அது தமிழ் ஊடகங்கள் என்றாலும் சரி சிங்கள ஊடகங்கள் என்றாலும் சரி.

போர்காலங்களில் யுத்தம் நடைபெற்ற இடங்களுக்கு ஊடகவியலாளர்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. யுத்தம் முடிந்த பிறகும் வடக்கு கிழக்கில் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக நடமாட முடியாத ஒரு பயங்கர நிலையே காணப்பட்டது. ஈழத்து ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டதும் கடத்தி படுகொலை செய்யப்படுவதும் தொடர்ந்து நடந்தன.

இலங்கையின் ஊடக அடக்குமுறையின் கறைபடிந்த வரலாறானது 1990ம் ஆண்டு ஊடகவியலாளர் ரிச்சேட் டி சொய்சா கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதில் இருந்து ஆரம்பிக்கிறது என குறிப்பிடலாம். அதன் பின் தமிழ் நெற் இணையத்தினுடைய ஆசிரியராக இருந்த தமிழ் ஊடகவியலாளர் தராகி சிவராம் 28 ஏப்ரல் 2005 அன்று கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டார். அங்கிருந்து கொலைபட்டியல் நீண்டு கொண்டு வருகிறது.

இன்றுவரை அந்த வரிசையில் திருகோணமலை மாணவர்களின் படுகொலையை அம்பலப்படுத்திய உதயன், சுடர்ஒளி பத்திரிகை ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜ் கொலை செய்யப்பட்டார். பின்னர் 2006ம் ஆண்டு உதயன் பத்திரிகை அலுவலகத்திற்குள் புகுந்த சிலர் அங்கு பணியில் ஈடுபட்டிருந்த இருவரை சுட்டுக் கொன்றனர். இச்சம்பவம் ஈழத்தின் மிகப்பெரும் ஊடகப்படுகொலை என வர்ணிக்கப்பட்டது.

யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் இலங்கையில் ஊடக சுதந்திரம் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது என்பதை கார்டூன் கலைஞரும் ஊடகவியலாளருமான பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் உணர்த்தியது. அச்சம்பவத்திலும் கூட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தானாகவே காணாமல் போனதாகவும், அவர் யாராலும் கடத்தப்படவில்லை என்றும் அரசாங்கத்தால் அறிக்கையிடப்பட்டது.

*2009 ஜனவரி 08ம் திகதி சன்டே* லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டார். ஆனால் அவர் இறப்பதற்கு முன் தான் கொலை செய்யப்படலாம் என்று முன்கூட்டியே தெரிவித்திருந்தார் ("When finally I am killed, it will be the government that kills me." – Lasantha Wickrematunge, Editor of the Sunday Leader") என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தினமின பத்திரிகையின் மூத்த ஊடகவியலாளர் போத்தல ஜயந்த கடத்தப்பட்டு தாக்கப்பட்டு வீசப்பட்டிருந்தார். அதனால் அவர் உயிர் பாதுகாப்பிற்காக நாட்டை விட்டு வெளியேறினார். உயிராபத்தின் காரணமாக பல தமிழ் ஊடகவியலாளர்களும் நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாட்டில் தஞ்சமடைந்தனர். அவ்வாறு வெளியேறிய ஊடகவியலாளர்கள் சிலர் தாம் குடியேறிய நாடுகளின் ஊடகத்துறையில் இணைந்து பணியாற்றினார்கள்.

அதன் பின்னர் சிங்கள தொலைக்காட்சி மற்றும் ரேடியோ நிறுவனமான சியத்த குண்டுத்தாக்குதலுக்கு உள்ளானது. சொல்லப்போனால் மக்கள் அரசுக்கெதிரான செய்திகளை அறியாமல் இருக்க மேற்கொள்ளப்பட்ட உத்திகளே இவை.

மேலும் பிபிசி இலங்கை வானொலி ஊடாக ஒலிபரப்பப்பட்ட போதும் அது பல தடவைகள் தடைப்படுத்தப்பட்டது. பிபிசி தமிழ் சேவையில் அரசாங்கம் பற்றி விமர்சிக்கும் செய்திகளை ஒலிபரப்பும் போது அது நிறுத்தப்பட்டு அதற்கு பதிலாக வேறு இசை ஒளிபரப்பப்பட்டது. பிபிசி சிங்கள சேவை அடிக்கடி தடைபட்டது. முக்கியமாக ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் அரசுக்கு சார்பாக இயங்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

இலங்கை ஊடக வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு விடயம் ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் 2010 ஆண்டு ஊடக சுதந்திர தினமான மே 3ம் திகதி விடுதலை செய்யப்பட்டதாகும். ஆனால் அதற்கு காரணம் அமெரிக்க அதிபர் இலங்கையில் ஊடக ஒடுக்குமுறை தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் 20 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட திஸ்ஸநாயகம் என சுட்டிக்காட்டியிருந்தமையாகும்.

இச்சம்பவம் இலங்கையின் கறைபடிந்த ஊடக அடக்குமுறையை மறைப்பதற்காகும். எது எப்படியாயினும் நீதிக்காக தமது இன்னுயிரை நீத்த ஊடகவியலாளர்களின் கொலைகளுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க முடிந்தும் கூட அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பது ஊடகம் மீதான அடக்குமுறையை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது.

**ஆகாஸ்**

# “மலையக” தேசிய அடையாளத்தின் - பரிணாமங்களும், பரிமாணங்களும்

கடந்தவாரத் தொடர்ச்சி...

இவர்களில் ஒரு பகுதியினர் இலங்கையிலேயே மோசமான சாதிய அசமத்துவத்துக்கு ஆளாகிய அருந்ததியர் சமூகமும் உண்டு. மலையக தோட்டங்களில் உள்ள லயன்களை விட மோசமான குடியிருப்புகளில் நெடுங்காலமாக வாழ்ந்து வந்தவர்கள். இன்னும் அப்படி பல இடங்கள் நாட்டில் உள்ளன.

கல்வியறிவு, மாற்றுத் தொழில்கள், சமூக நீதி என்பவற்றை மிகச் சமீப தசாப்தங்களில் தான் அவர்களில் கணிசமானோர் அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். நெடுங் காலமாக அரசியல் தலைமையற்றவர்களாக வாழ்பவர்கள். இந்திய வம்சாவளியினருக்கான எந்த குறைந்தபட்ச சலுகைகளும் எட்டப்படாதவர்கள். இலங்கைக்கான இந்திய தூதரகம் உருவாகி இந்த நூற்றாண்டு காலப்பகுதிக்குள் இந்திய வம்சாவளியினருக்கு வழங்கப்பட்ட ஆயிரக்கணக்கான புலமைபரிசில்களில் ஒன்றைக்கூட காணாதவர்கள். இன்னும் சொல்லப்போனால் இந்தியத் தூதரகத்தின் கணக்கில் கூட அகப்படாத உதிரிகளாக வாழ்ந்து வந்தவர்கள். சகல இன்னல்களையும் தாமே போராடி எதிர்கொண்டு மீண்டுகொண்டிருப்பவர்கள்.

இலக்கியங்களை படைக்கு மளவுக்கு வசதிகளையோ, வாய்ப்புகளையோ அடையாததற்கு காரணம் அவர்கள் சமூக திரட்சியாக வாழ வழியற்றவர்களாக இருந்தமை. சிதறி வாழ்ந்து வந்ததால் அவர்கள் பேரம் பேசும் வலுவற்ற அரசியல் அனாதைகளாக இருந்தார்கள். செறிவான வாக்கு வங்கியாக இராததால் பல அரசியல் கட்சிகளும் அவர்களை பயன்படுத்திவிட்டு கடப்பவர்களாக இருந்தார்களேயொழிய சமூகமாக அடையாளம் காணவில்லை. எனவே அரசியல் தலைமையை கட்டியெழுப்பும் திராணியில்லாதவர்களாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

80களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கொழும்பில் தலைமையகம் அமைத்து இந்திய வம்சாவளியினரின் ஏகபோக அமைப்பாக நிறுவ முயற்சித்தது. ஆனால் மீண்டும் மேல் மாகாண தமிழ் வாக்குகள் மலைநாட்டிலிருந்து வந்திறக்கப்பட்ட இதொகா தலைவர்களுக்கு பயன்பட்டதேயொழிய மேல் மாகாணத்தவர்களின் நேரடி பிரதிநிதிகளாக அவர்கள் இருக்கவில்லை. அதன் விளைவு இ.தொ.க தொடர்ந்தும் பெருந்தோட்டத்துறை மக்களின் தலைமையாக நீடித்ததே தவிர மேல் மாகாண மக்களின் அரசியல் அபிலாஷைகளை அடையாளம் கண்டு தீர்க்கும் அமைப்பாக ஆக்கிக்கொள்ளவில்லை.

செல்லச்சாமி, பி.பி.தேவராஜ், யோகராஜன் ஆகியோர் கூட இம்மக்களின் நேரடிப் பிரதிநிதிகள் அல்லர். இன்னும் சொல்லப்போனால் கொழும்பு உள்ளிட்ட மேல் மாகாண தமிழ் மக்களின் நேரடி பிரதிநிதிகளாக பாராளுமன்றத்துக்கு இதுவரை வரலாற்றில் எவரும் தெரிவு செய்யப்பட்டது கிடையாது. மனோ கணேசனையும் சேர்த்துத்தான் இங்கே குறிப்பிடுகிறேன். ஆனால் அம்மக்கள் தமது பிரதிநிதிகளாக அவர்களை தெரிவு செய்ததன் ஒரே நோக்கம் அவர்களின் அரசியல் தலைமையாக இருப்பார்கள் என்கிற நம்பிக்கையில் தான்.

அவர்கள் நிச்சயம் இம்மக்களின் பிரதிநிதிகளாக இருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் இம்மக்களின் அரசியல் தலைமையாகவோ, அரசியல் அபிலாஷைகளை (சலுகைகள், நிவாரணங்கள், தொண்டு நடவடிக்கைகள் அல்ல) நிறைவேற்றுபவர்களாக இருந்தார்களா? அம்மக்கள் உதிரிகளாக சிதறியிருக்கிறபோதும் தனித்துவமான அரசியல் சக்தியாகவும், தனித்துவமான அரசிய அபிலாஷைகளைக் கொண்டவர்களாகவும் அடையாளம் கண்டு அதற்குரிய அரசியல் திட்டத்துடன் இயங்கிய எவரும் இருந்திருக்கிறார்களா. இல்லை! மாறாக வெறும் வாக்கு வங்கியாக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். மனோ கணேசன் இந்த வாக்கு வங்கியை கவனமாக அடையாளம் கண்டவர்களில் ஒருவர். ஆரம்பத்தில் அவரிடம் சில புரிதலும், குறைந்தபட்ச வேலைத்திட்டமும் இருந்ததை அறிவோம். ஆனால் அவரும் சற்று அகலக் கால் வைத்து அரசியல் செய்ய நேரிட்டதும் இந்த தனித்துவமான பிரச்சினையும் தூர எறியப்பட்டுவிட்டது என்றால் அது மிகையாகாது.

விரும்பியோ விரும்பாமலோ இலங்கைத் தீவு என்பது பல்வேறு அடையாளங்களைக் கொண்ட குழுமங்களைக் கொண்ட தேசமாக இருக்கிறது. இனத்துவம், சாதித்துவம், மதத்துவம், பிரதேசத்துவம், என அடையாளங்களுக்குள் அடையாளங்களாக பெருகி, விரிந்து போயிருக்கிற தேசம். சமூக அடையாளங்கள் எனும்போது ஒன்றில் ஆதிக்க சமூகம் அதிகாரத்துவத்துக்காக தன்னை ஒரு பேரடையாளமாக ஆக்கிக் கொள்கிறது. மறுபுறம் ஏனைய சமூகங்கள் குறிப்பிட்ட அடையாளத்தைக் கொண்டிருப்பதாலேயே ஆதிக்க அடையாளங்களால் அநாதரவாக ஆக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்த்தவும், ஈடு செய்யவும் தமது அடையாளத்தை அறிவிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம், மலையகம் என்கிற நான்கு தேசிய இனங்களுக்குள் உள்ளடங்காத / உள்ளடக்கப்படாத இன்னொரு பெருவாரி மக்கள் கூட்டமொன்று ஐந்தாவது தேசிய இனம் என்கிற அடையாளத்தை நிறுவ நிர்ப்பந்திக்கப்படுகிறதா என்று பகிரங்கமாக இன்று கேள்வி எழுப்பும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இந்திய வம்சாவளி என்கிற பதத்துக்கு மாற்றுப் பதமாக “மலையகம்” என்கிற பதம் மலைநாட்டு வாழ் இந்திய வம்சாவளியினரின் விருப்பாகவும், அலங்காரமான பதமாகவும் இருக்கக் கூடும். ஆனால் அது ஒட்டுமொத்த இந்திய வம்சாவளியினருக்கும் பொருந்துகிறதா என்பதே அடிப்படைக் கேள்வி. மலைநாட்டுக்கு“மலை”என்று பொருந்துகிறது என்று வாதத்துக்கு கூறும் போது மலையகத்துக்கு வெளியில் உள்ளவர்களுக்கு எந்த வாதத்தால் பொருந்துகிறது?

இதனால் “மலையகம்” என்கிற அடையாளத்தையோ, பதத்தையோ மறுப்பதாகவோ, நிராகரிப்பதாகவோ எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. 90களில் மலையக மக்கள் முன்னணி மலையகத் தேசியம், மலையகத்துக்கான சுய நிர்ணய உரிமை, மலையக அதிகார அலகு என்றெல்லாம் முன்னெடுத்த வேளை இந்த அடையாளம் பற்றிய பிரச்சினை எழுந்தது. இறுதியில் “மலையகம்” என்கிற அடையாளத்துக்குள் அனைத்து இந்திய வம்சாவளியினரையும் இணைப்போம் என்று அவர் தெரிவித்தார். அதனை நடைமுறை சாத்தியப்படுத்துவீர்களா? என்கிற கேள்விக்கு நிச்சயமாக மேற்கொள்வதாக கூறினார்.

அன்று தொடக்கம் இந்திய வம்சாவளி என்கிற பதத்தை கைவிட்டு கொழும்பு வாழ் இந்திய வம்சாவளியான நானும் என்னை மலையகத்தவனாகவே அடையாளப்படுத்தி வந்திருக்கிறேன். ஆனால் அதில் ஆனதொன்றும் கிடையாது. என்னை மலையகத்தவனாக என்னைச் சார்ந்தவர்கள் ஏற்றுக் கொண்டார்களோ என்னவோ, ஆனால் குறைந்தபட்சம் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் கூட என்னை மலையகத்தவனாக ஏற்றுக் கொள்ளவுமில்லை. சேர்த்துக் கொள்ளவுமில்லை. நான் தான் அதை சொல்லிக்கொண்டு திரிகிறேன் என்பதை உணர்ந்துகொண்டேன். அதுபோல எழுத்துக்களிலும் கூட மலையகம் என்றே பயன்படுத்தி வந்திருக்கிறேன். மலையகத்துக்கான முதலாவது இணையத்தளத்தை “நமது மலையகம்” என்கிற பெயரில் தொடங்கினேன். அதன் உள்ளடக்கக் கனதி காரணமாக சிறந்த இணையத் தளத்துக்கான ஜனாதிபதி விருதை 2018இல் பெற்றுக்கொடுத்தது இன்னொரு கதை.

மலையக மக்கள் முன்னணி மேற்படி அக்கருத்தாக்கத்தை பலப்படுத்தவும், பரப்பவும் தவறியது. “மலையகம்” என்கிற அடையாளத்தை ஒட்டுமொத்த இந்திய வம்சாவளியினருக்கான பதமாக அவர்கள் முன்னெடுக்கத் தவறியதன் விளைவு “மலையகம்” என்றும், “இந்திய வம்சாவளி” என்றும் இருவித போக்குகள் தொடர்ந்தும் நீடித்தன. மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளியினர் மலையகத்தினரை விட அதிகமாக தம்மை இலங்கைப் பிரஜைகள் என்று பதிவு செய்துகொண்டார்கள் என்று நிச்சயமாகக் கூற முடியும். இப்போது அவர்களைத் தான் “மலையகத்தவர்” என்று பதியுங்கள் என்று கூறப்போகிறோம்.

இப்போது என்ன! 5% வீதத்துக்கும் அதிகமாக எண்ணிக்கையைக் காட்டுவதற்காக இவர்கள் தேவைப்படுகிறார்களா என்கிற கேள்வியை எழுப்பாமல் இருக்க முடியவில்லை. இதயசுத்தியுடன் சொல்லுங்கள். இதுவரை மலையக அரசியல் நிகழ்ச்சிநிரலில் சேர்த்துக்கொள்ளப்படாத இவர்களை இன்று பிரக்ஞையாகவே சேர்த்துக் கொள்வதற்காகத்தான் இந்த அடையாளப் பெயரிடலை முன்மொழிகிறீர்களா? இன்று எண்ணிக்கையை அதிகரித்துக் காட்டுவதற்காக அடையாளப் பெயர் கோர கிள்ளுக்கீரையாக பயன்படுத்திவிட்டு அதன் பின்னர் கைவிட எடுக்கப்படும் முஸ்தீபா?

“இந்திய வம்சாவளி” என்கிற பதம் “இந்திய அடையாளத்தை” சுமக்க வைத்துக்கொண்டிருப்பதால் அதனை கைவிடலாம் என்கிற வாதத்தை ஏற்றுக்கொள்ள பலர் தயாராகவே இருக்கிறார்கள் என்பது உண்மை தான். ஏனென்றால் அவர்களை இந்தியர்களாகவும், இந்திய நிகழ்ச்சிநிரலின் “பிடி” என்றும் சிங்கள பெருந்தேசிய சக்திகள் தமது அரசியல் வசதிக்காக பிரச்சாரம் செய்து வந்திருக்கிறார்கள் என்பது உண்மையே. அதற்காகவே அவர்கள் “மலையகம்” என்கிற அடையாளத்தை விட “இலங்கையர்” என்கிற அடையாளப் பதிவையே தொடரப் போகிறார்கள் என்பது எனது கணிப்பு. மலையகம் அல்லது இந்திய வம்சாவளி என்கிற பதங்களால் அவர்களுக்கு ஆகப்போவதென்ன என்கிற யதார்த்தக் கேள்விக்கு இதனை முன்னெடுப்பவர்கள் மேற்சொன்ன விபரங்களில் இருந்து அரசியல் புரிதலை எட்டவேண்டும்.

கொழும்பு வாழ் இந்திய மேட்டுக்குடிகளின் கோரிக்கை என்கிற திரிபு மலையகத்தில் பொதுவான ஒரு உளவியல் புரிதல் வெகுஜனமட்டத்தில் கட்டமைக்கப்பட்டு பரப்பப்பட்டு வந்திருக்கிறது. அதாவது “மலையக மக்கள்” என்கிற அடையாளத்தை மறுத்து “இந்திய” அடையாளத்தை வலியுறுத்துபவர்கள் யார் என்கிற ஒரு புனைவு கற்பிதமாக பரப்பப்பட்டு நம்பவைக்கப்பட்டு வந்திருக்கிறது. கொழும்பில் வாழும் இந்தியர்கள் என்போர் உயர் வர்க்க வியாபார வர்த்தகர்களே. உயர் சாதி மேட்டுக்குடியினரே. இந்திய தூதரகத்துடனும், இந்தியாவுடனும் நெருக்கமான உறவைப் பேணி இந்திய நலன்களை அனுபவித்து வருபவர்களே. இலங்கையில் ஒரு காலும், இந்தியாவில் ஒரு காலும் வைத்துக்கொண்டு இரண்டையும் அனுபவித்துக் கொண்டிருப்பவர்களே. இவர்கள் தமது உயர்குடி நலன்களுக்காக “இந்தியர்” என்கிற அடையாளத்தை விட்டுகொடுக்கத் தயாரில்லையாம்.

இந்த வாதம் ஒரு பத்தாம் பசலித்தனமானதும், மிகுந்த அறிவுப் பஞ்சம் உள்ள வாதமும் கூட. சிலர் அறியாமையால் இதை முன்வைக்கிறார்கள். புத்திஜீவிகள் என அடையாளப்படுத்திக்கொள்ளும் இன்னும் பலரோ அறிவதில் அக்கறையே இல்லாமல் இதனை பிரச்சாரப்படுத்திக் கொண்டு வருகின்றனர். 1971 ஜேவிபி கிளர்ச்சிக் காலத்திலும் கூட தமது ஐந்து முக்கிய வகுப்புகளில் ஒன்றாக இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் தரகுக் கூட்டமாக இந்திய வம்சாவளியினரைக் கூறியது. அவர்கள் சுட்டிக்காட்டியதும் மேற்படி பட்டியலைத் தான். அந்தப் பட்டியல் ஒட்டுமொத்த இந்திய வம்சாவளியினருக்கும் எதிராகப் பயன்படுத்தப்பட்டது.

தொடரும்...

- என்.சரவணன் -

# விளையாட்டுச் செய்திகள்

## உஸ்மான் கவாஜாவுக்கு ஐ.சி.சி எச்சரிக்கை



பெர்த் நகரில், ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் மோதிய முதல் டெஸ்ட் போட்டியின் போது ஆஸ்திரேலிய தொடக்க வீரர் உஸ்மான் கவாஜா தனது சட்டையில் கருப்பு பட்டை அணிந்து விளையாடினார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக வாசகம் எழுதிய ஷூவை அணிய கவாஜா முடிவு செய்திருந்தார். இதற்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) தடை விதித்தது. இதையடுத்து அவர் கருப்பு பட்டை அணிந்து விளையாடினார்.

இது ஐ.சி.சி.யின் ஆடை மற்றும் உபகரண விதி மீறல்கள் ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து கவாஜாவுக்கு ஐ.சி.சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து ஐ.சி.சி செய்தி தொடர்பாளர் கூறும்போது, உஸ்மான் கவாஜா, தனிப்பட்ட செய்தியை காட்ட ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் மற்றும் ஐ.சி.சி முன் அனுமதி பெறாமல் கருப்பு பட்டை அணிந்துள்ளார். இது ஒரு விதி மீறல் ஆகும். முதல் கட்ட விதி மீறலையடுத்து கண்டனம் தெரிவிக்கப்படுகிறது என்றார்.

இது தொடர்பாக கவாஜா கூறும்போது, தனிப்பட்ட துக்கத்திற்காக கருப்பு பட்டையை அணிந்ததாக ஐ.சி. சியிடம் கூறினேன். ஐ.சி.சியால் நான் கண்டிக்கப்பட்டதாக நினைக்கவில்லை என்றார்.

## வீரரை மாற்றி எடுத்த பஞ்சாப்




ஐ.பி.எல் 2024 மினி ஏலத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணி உரிமையாளர்களான பிரீத்தி ஜிந்தா மற்றும் நெஸ் வாடியா இந்திய அணியில் இடம்பெறாத சஷாங்க் சிங் ஐ வெற்றிகரமாக ஏலத்தில் எடுத்தனர். ஏலத்தில் எடுத்த பிறகு இருவரும் குழப்பமுற்ற நிலையில் காணப்பட்டனர்.

19 ஆம் திகதி நடைபெற்ற ஏலத்தில் பஞ்சாப் அணி சஷாங்க் சிங்-ஐ வாங்கும் திட்டத்தில் இல்லாதது தெரியவந்துள்ளது. அணியில் வாங்க நினைக்காத வீரர் ஒருவரை பஞ்சாப் அணி வாங்கியதை புரிந்துகொண்ட ஏலதாரர் மல்லிகா சாகர் ஆச்சரியமுற்றார்.

சஷாங்க் சிங் என்ற பெயரில் இரண்டு வீரர்கள் இருந்த நிலையில், குழப்பத்தில் இருந்த பஞ்சாப் அணி 19 வயதான சஷாங்க் சிங் என்ற வீரரை வாங்குவதற்கு பதிலாக 32 வயதான சஷாங்க் சிங்-ஐ ஏலத்தில் எடுத்துள்ளது.

இது தொடர்பான தகவல்கள் சமூக வலைதளங்களில் வைரல் ஆக துவங்கியது. இந்த நிலையில், சஷாங்க் சிங்-ஐ வாங்கியது தொடர்பாக பஞ்சாப் கிங்ஸ் அணி தனது எக்ஸ் அக்கவுண்ட்-இல் விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பான பதிவில், "சஷாங்க் சிங்-ஐ வாங்க வேண்டும் என்ற திட்டம் எங்களிடம் இருந்தது. பட்டியலில் ஒரே பெயருடன் இரண்டு வீரர்கள் இருந்ததே குழப்பத்திற்கு காரணமாகிவிட்டது.

அவரை அணியில் எடுத்ததில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். எங்கள் வெற்றிக்கு அவர் பங்களிப்பதை பார்க்க விரும்புகிறோம்." என்று குறிப்பிட்டுள்ளது.

## சுப்மன் கில்லை முந்திய பாபர் அசாம்



ஒருநாள் போட்டிக்கான பேட்ஸ்மேன்களின் புதிய தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டது.

இந்தப் பட்டியலில் பாகிஸ்தானின் பாபர் அசாம் மீண்டும் முதல் இடம் பிடித்துள்ளார். இந்திய அணியின் சுப்மன் கில் 2-வது இடத்திலும், இந்திய அணியின் விராட் கோலி 3-வது இடத்திலும், ரோகித் சர்மா 4-வது இடத்திலும் உள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர் 5வது இடத்திலும், நியூசிலாந்தின் டேரில் மிட்செல் 6வது இடத்திலும் உள்ளனர். அயர்லாந்தின் ஹாரி டெக்டர் 7-வது இடத்திலும், தென் ஆபிரிக்காவின் வான் டெர் டுசன் 8-வது இடத்திலும், இங்கிலாந்தின் டேவிட் மலான் 9-வது இடத்திலும், தென் ஆபிரிக்காவின் ஹென்ரிச் கிளாசன் 10-வது இடத்திலும் உள்ளனர்.

## சச்சின் சாதனையை முறியடித்த வங்காளதேச வீரர்



"நியூசிலாந்து - வங்காளதேசம் அணிகளுக்கு இடையேயான 2-வது ஒருநாள் போட்டி நடைபெற்றது. இதில் டொஸ் வென்ற நியூசிலாந்து அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி வங்காளதேச அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக சவுமியா சங்கர் - அனுமுள் களமிறங்கினர்.

சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்த வங்காளதேச அணி, சவுமியா சங்கரின் சிறப்பான ஆட்டத்தால் 291 ரன்கள் குவித்தது. அவர் நியூசிலாந்து அணியின் பந்து வீச்சை அருமையாக எதிர்கொண்டு சதம் அடித்தார். 22 பவுண்டரி 2 சிக்சருடன் 169 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். இறுதியில் வங்காளதேசம் அணி 291 ரன்களுக்கு அவுட் ஆனது.

இந்த சதத்தின் மூலம் நியூசிலாந்து மண்ணில் சச்சின் சாதனையை சவுமியா முறியடித்துள்ளார். சச்சின் 2009-ம் ஆண்டில் நியூசிலாந்துக்கு எதிராக 163 ரன்கள் எடுத்ததே ஆசிய அணிகளில் உள்ள ஒரு வீரரின் அதிகபட்ச ஸ்கோராக இருந்தது. இந்த சாதனையை தற்போது வங்காளதேச வீரர் சவுமியா சங்கர் முறியடித்து வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

மேலும் வங்காளதேச அணி வீரர்களில் ஒருவரின் தனிபட்ட அதிகபட்ச ரன்களில் சவுமியா சங்கர் 2-வது இடத்தில் உள்ளார். முதல் இடத்தில் லிட்டன் தாஸ் (176) உள்ளார்.

## ரொனால்டோ 2023ஆம் ஆண்டில் மட்டும் சம்பாதித்தது எத்தனை கோடிகள் தெரியுமா?



2023ஆம் ஆண்டில் மட்டும் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 1,844 கோடி சம்பாதித்துள்ளார் என தெரிய வந்துள்ளது.

**அல் நஸர் அணிக்கு மாற்றம்**

போர்த்துக்கலின் கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோவும் இந்த ஆண்டு (2023) நல்லது, கெட்டது இரண்டும் ஒருசேர அமைந்துள்ளது. கடந்த 12 மாதங்களில் ரொனால்டோ தனது கால்பந்து வாழ்க்கையில் பாரிய மாற்றத்தைக் கண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது அல் நஸர் அணிக்கு அவர் மாறுவதால் கால்பந்து வாழ்க்கை முடிவுக்கு வருகிறது என்று பலர் நினைத்தனர். ஆனால் அவர் தனது மிரட்டலான செயல்பாடுகளினால் சவுதி புரோ லீக் தொடரில் மிகச்சிறந்த வீரராக உருவெடுத்தார். அத்துடன் அல் நஸர் அணியையும் அவர் உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றார். இருப்பினும், 2023ஆம் ஆண்டில் களத்திற்கு வெளியே பல சிக்கல்களை எதிர்கொண்டார்.

**வருமானம்**

இந்த ஆண்டில் மட்டும் ரொனால்டோ 50 கோல்கள் (கிளப் மற்றும் தேசிய அணி) அடித்து மிரட்டினார். அவர் ஒரு காலண்டர் ஆண்டில் 50 கோல்கள் அடிப்பது இது 8வது முறை ஆகும்.

அதேபோல் அவர் இந்த ஆண்டில் ஈட்டியுள்ள வருமானம் வியக்க வைத்துள்ளது. ரொனால்டோ 175 மில்லியன் பவுண்டுகளை சவுதி கிளப் மூலம் ஈட்டியுள்ளார் (இந்திய மதிப்பில் 1,844 கோடி).

மேலும், Forbesயின் 2023ஆம் ஆண்டும் அதிக சம்பளம் வாங்கும் கால்பந்து வீரர்களின் பட்டியலில், ரொனால்டோ 207 மில்லியன் பவுண்டுகள் (இந்திய மதிப்பில் 2,181கோடிகள்) வருமானம் ஈட்டியுள்ளார் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# உலக வலம்

## உலக சுகாதார அமைப்பு விடுத்த எச்சரிக்கை

இந்தியாவில் கேரளா மாநிலத்தில் முதன்முதலில் கண்டறியப்பட்ட JN-1 எனப்படும் கொரோனா வைரஸின் புதிய திரிபு தொடர்பில் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. இதேவேளை, கேரளா மட்டுமின்றி சிங்கப்பூரிலும் இந்த கொரோனா நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா ஒமிக்ரோன் வைரஸின் துணை வகை BA2.86 ஐ மாற்றியமைப்பதன் மூலம் உருவாக்கப்பட்ட மிக வேகமாக பரவும் வைரஸ் வகை JN.1 என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இருப்பினும், முகக்கவசம் அணிவதன் மூலமும், நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பேணுவதன் மூலமும் இதனைத்தடுக்க முடியும் என உலக சுகாதார அமைப்பு விளக்கம் அளித்துள்ளது.




அமெரிக்காவில் தற்போது கொவிட்19 பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவதாகவும், அதற்கு காரணம் JN-1 வைரஸ் திரிபு என்றும் தொற்றுநோயியல் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது. புதிய கொரோனா துணை விடயத்தில் பொது சுகாதாரத்தில் ஏற்படும் பாதிப்பு இன்னும் குறைவாக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## அகழ்வாராய்ச்சியில் பழங்கால கப்பல்



நோர்வே நாட்டில் ஓஸ்பெர்க் பகுதியில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் வைகிங் இன மக்களின் காலத்தில் உருவாக்கப்பட்ட கப்பல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. எட்டாம் நூற்றாண்டு முதல் 11ஆம் நூற்றாண்டு வரை ஸ்வீடன், நோர்வே, பின்லாந்து மற்றும் ரஷ்யாவின் சில பகுதிகளில் வாழ்ந்து வந்த வைகிங்குகளின் காலத்தில் உருவாக்கப்பட்ட கப்பல் ஒன்று அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டிருப்பது வரலாற்றாய் வாளர்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக மாறியிருக்கிறது.

மிக அழகாக வடிவமைக்கப்பட்ட வைகிங் கப்பல் நோர்வேயில் உள்ள ஓஸ்பெர்க் பண்ணையில் நடந்த அகழ் வாராய்ச்சியின்போது, ஒரு பெரிய அகழ்விலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இது 9 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். ஓஸ்பெர்க் பண்ணைப் பகுதியில் அகழ் வாராய்ச்சியாளர்களால் மிக நுட்பமாக இந்தப் படகு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது வைகிங்குகளின் கலைப் படைப்பையும், கப்பல் கட்டும் வல்லமையையும் பிரதி பலிப்பதாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

வைகிங்குகள் என்றால், அண்டை நாடுகளிடமிருந்து பொருள்களையும் பெண்களையும் கொள்ளையடித்துச் செல்வோராகவே உருவகப்படுத்தப்பட்டிருந்தனர். ஆனால், அவர்களது உண்மை முகம் என்ன, அவர்கள் யார்? எப்படிப்பட்டவர்கள்? என்று உலகுக்கு அறியச் செய்ய அகழ்வாராய்ச்சிக் குழுவினர் பல ஆண்டுகாலமாக இப்பகுதியில் தொல்லியல் ஆய்வில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த வைகிங் என்ற வார்த்தையின் பொருளுக்கே பல சர்ச்சைகள் இருக்கிறதாம். ஒரு மொழியில் இதனை மொழிபெயர்த்தால் கொள்ளையர் என்று பொருள்படுமாம். மற்றொரு மொழியிலோ கடல் சாகசப் பயணங்களை மேற்கொள்வோர் என்று பொருள்வருகிறதாம்.

இது இரண்டிலுமே இவர்கள் கெட்டிக்காரர்கள்தானாம். அன்றைய காலகட்டத்தில் இவர்களது தாக்குதலுக்கு இரையாகாத கடல் நகரங்களே இருந்ததில்லையாம். இவர்களுக்காகவே பல நாடுகள் கடல்பகுதியில் கோட்டைகளைக்கூட எழுப்பினார்களாம். இத்தனைக்கும் அடிப்படையாக இருந்தது இவர்கள் உருவாக்கிய கப்பல்களே. அவை வைகிங் கப்பல்கள் எனப்படுகின்றன. பல அபூர்வ கப்பல்களை இவர்கள் கட்டமைத்திருக்கின்றனர். மரங்களை வைத்து கப்பல் கட்டும் நுட்பத்தை இவர்கள் கண்டுபிடித்ததாகவும் ஒருசாரார் கருதுகிறார்கள். இவர்கள் கப்பல் கட்டுவதில் வல்லவர்களாக இருந்துள்ளனர். கடுமையான குளிர்பிரதேசங்களில் வாழ்ந்ததால், இவர்கள் அந்தக் காலத் தேவைக்காகவே கொள்ளையடித்ததாகவும் வரலாற்றாளர்கள் கூறுகிறார்கள். இவர்களைப் பற்றிய ஏனைய கட்டுக்கதைகளையும் தாண்டி, இவர்கள் கலையில் வல்லவர்களாக இருந்துள்ளனர் என்றே இவர்கள் வாழ்ந்த பகுதியில் நடக்கும் தொல்பொருள் ஆராய்ச்சி மெய்ப்பிப்பதாகக் கூறப்படுகிறது.

## கூகுள் நிறுவனத்திற்கு அபராதம்

கூகுள் நிறுவனத்துக்கு ரூ.421 கோடி அபராதம் விதித்து ரஷ்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ரஷ்யாவை குறிப்பிட்டு உக்ரைன் உள்ளிட்ட அரசியல் விவகாரங்களில் தவறான தகவல்களை நீக்காமல் வைத்திருந்ததற்காக அல்பபேட் நிறுவனத்தின் கிளை நிறுவனமான கூகுளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா குறித்து தீவிரவாதத்தைத் தூண்டும் வகையிலான கருத்துகள் இருந்ததாகவும், அதனை நீக்கக்கோரியதற்கு கூகுள் நிறுவனம் சரியாக பதிலளிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது. கூகுளின் இத்தகைய செயலை ஒருதலைபட்ச பிரச்சாரம் என ரஷ்யா விமர்சித்துள்ளது.

## அகதிகளை தடுக்க புதிய சட்டம்

பிரான்ஸ் நாட்டிற்குள் சட்டவிரோதமாக பல ஆண்டுகளாக அல்ஜீரியா, மொராக்கோ, போர்ச்சுகல், துருக்கி உள்ளிட்ட பல நாடுகளின் அகதிகள் தரைவழியாகவும், கடல் வழியாகவும் நீண்ட தூர ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு மக்கள் உள்ளே நுழைந்து வருகின்றனர். சமீப வருடங்களாக பிரான் ஸில் இவ்வாறு உள்ளே நுழையும் அகதி களால் பல்வேறு உள்நாட்டு சிக்கல்கள் எழுந்தன. கட்டுக்கடங்காமல் அகதிகள் நுழைவதை தடுக்கும் விதமாக சட்டம் இயற்றவேண்டும் என அந்நாட்டு அரசியல் தலைவர்கள் விவாதித்து வந்தனர்.

இந்நிலையில், பிரான்ஸ் நாட்டிற்கு வரும் அகதிகள் குறித்த புலம்பெயர்வோர் சட்டத்தில் கடுமையான மாற்றங்களை கொண்டு வரும் வகையில் மசோதாவை வெற்றிகரமாக தாக்கல் செய்துள்ளது. இந்த மசோதாவை பிரான்ஸ் அதிபர் எம்மானுவல் மேக்ரானின் ரெனய்ஸான்ஸ் கட்சி (Renaissance party) மற்றும் எதிர்கட்சி தலைவரும் தீவிர வலதுசாரி சிந்தனையாளருமான மரின் லெ பென் (Marine Le Pen) சார்ந்த நேஷனல் ரேலி (National Rally) ஆகிய இரு கட்சிகளுமே ஒருமித்து கொண்டு வந்திருக்கின்றன.

மேக்ரானின் கட்சிக்குள்ளேயே இதற்கு ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவித்தாலும் அவர் இதனை பொருட்படுத்தவில்லை. விரைவில் சட்ட அந்தஸ்து பெற உள்ள இந்த மசோதாவின்படி புலம்பெயர்ந்தவர்கள் தங்கள் குடும்பத்தினரை கொண்டு வருவது கடினமாக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகள் கிடைப்பதும் தாமதமாகும். குடிமகன்கள் வேறு, அகதிகள் வேறு என பாகுபாடு காட்டும். இதன்படி சட்டபூர்வமாக குடியேறுபவர்களுக்கும்



நலத்திட்ட உதவிகள் கிடைப்பது கடினமாகி உள்ளது. மரின் லெ பென் வரவிருக்கும் புதிய சட்டத்தை, தங்கள் சித்தாந்தத்திற்கு கிடைத்த வெற்றி என கூறியுள்ளார்.

இது தொடர்பில் பேசிய ஜனாதிபதி மேக்ரான், "நாட்டில் புலம் பெயர்பவர்களால் பிரச்சனை இருப்பது உண்மைதான். இதனால் உள்நாட்டில் அமைதியின்மை தோன்ற கூடிய நிலை இருந்தது. அதனை தடுக்க வேண்டியது அரசின் கடமை. வெள்ளம் போல் உள்ளே நுழையும் அகதிகளை தடுக்கும் கவசமாக இந்த சட்டம் அமையும்" என தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் அகதிகளுக்கு உறுப்பினர் நாடுகளின் எல்லைக்கருகே மையம் அமைக்கவும், நுழைவதற்கு அனுமதி மறுக்கப்படும் அகதிகளை உடனுக்குடன் அவரவர் சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பவும், ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடுகள் ஒரு ஒப்பந்தத்தை சில தினங்களுக்கு முன் உருவாக்கியது குறிப்பிடத்தக்கது. 2027ல் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் அகதிகள் பிரச்சனை வாக்குகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் அம்சமாக இருக்கும் என மேக்ரான் கருதுவதால் தன் நாட்டு மக்களை ஈர்க்கும் வகையில் விரைவாக இந்த சட்டத்தை கொண்டு வர முயல்கிறார் என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

## டிரம்ப் இல்லை என்றால் நானும் விலகுவேன் – விவேக் ராமசாமி



அடுத்த வருடம் அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதியின் டிரம்ப் பெயர் வாக்குச்சீட்டில் இடம்பெறாமல் இருந்தால் நானும் போட்டியிலிருந்து விலகுவேன் என குடியரசு கட்சியில் அதிபர் வேட்பாளருக்கான போட்டியில் உள்ள இந்திய வம்சாவளி தொழிலதிபரான விவேக் ராமசாமி கூறியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவில் அடுத்த வருடம் நவம்பர் மாதத்தில் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. தற்போதைய அதிபரான ஜோ பைடன், ஜனநாயக கட்சி சார்பில் மீண்டும் போட்டியிட உள்ளார். அதோடு அவரை எதிர்த்து குடியரசு கட்சியை சேர்ந்த முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் தீவிரமாக களம் இறங்கி உள்ளார்.

இந்நிலையில், நாடாளுமன்ற முற்றுகை தொடர்பான வழக்கை விசாரித்த கொலராடோ நீதிமன்றம், அதிபர் பதவிக்கு போட்டியிட டிரம்ப் தகுதியற்றவர் என தீர்ப்பு வழங்கியதுடன், கொலராடோவில் குடியரசு கட்சியின் முதல்நிலை வாக்குப்பதிவுக்கான வாக்குச்சீட்டில் டிரம்பின் பெயர் இருக்கக் கூடாது எனவும் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பில், குடியரசு கட்சியில் அதிபர் வேட்பாளருக்கான போட்டியில் உள்ள, இந்திய வம்சாவளி தொழிலதிபரான விவேக் ராமசாமி, "இந்த தீர்ப்பை சட்டவிரோதமான நடவடிக்கையாக பார்க்கிறேன். இது அமெரிக்காவில் மோசமான விளைவை ஏற்படுத்தும். டிரம்ப் பெயர் வாக்குச்சீட்டில் இடம்பெறாமல் இருந்தால் நானும் போட்டியிலிருந்து விலகுவேன். இதேபோன்று குடியரசு கட்சியின் பிற வேட்பாளர்களும் விலகவேண்டும் என விவேக் ராமசாமி குறிப்பிட்டுள்ளார். அதேவேளை டிரம்பிற்கு எதிரான இந்தத்தீர்ப்பு, கொலராடோவில் மார்ச் 5ஆம் திகதி நடைபெற உள்ள குடியரசுக் கட்சியின் முதல்நிலை தேர்தலுக்கு மட்டுமே பொருந்தும்.

ஆனால் அதன் முடிவு நவம்பர் 5ஆம் திகதி நடைபெற உள்ள பொதுத் தேர்தலின்போது, அந்த மாநிலத்தில் டிரம்புக்கு பின்னடைவை ஏற்படுத்தலாம் என கருதப்படுகிறது. அமெரிக்காவில் கடந்த 2020ல் நடைபெற்ற அதிபர் தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்றார். இதுதொடர்பாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டு, 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சான்றிதழ் அளிக்கப்படும்போது, டிரம்பின் ஆதரவாளர்கள் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியதில் ஏற்பட்ட வன்முறை மற்றும் காவல்துறை யினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தை அடுத்து போராட்டத்திற்கு தூண்டுதலாக டிரம்ப் செயல்பட்டதாக அவர் மீது கொலராடோ மாநில நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்தது. இந்த வழக்கின் விசாரணை முடிந்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியபோது, அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கு டிரம்பிற்கு தடை விதித்து உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஆயுட்காலம் முழுதும் வளரும் தாவரம்

தென்மேற்கு ஆபிரிக்காவில் உள்ள நமீப் பாலைவனத்தின் மோசமான நிலப்பரப்புகளில், ஒரு பழமையான தாவரம் இயற்கையின் முரண்பாடுகளை மீறி Welwitschia Mirabilis என்ற தாவரம் வளருகின்றது. இதன் தனித்துவமான தோற்றம் மற்றும் நம்ப முடியாத ஆயுட்காலம் போன்றவை தாவரவியலாளர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்களை வெகுவாகக் கவர்கிறது.

அதன் குறிப்பிடத்தக்க தோற்றத்தைப் பொருத்தவரை இதில் இரண்டு பெரிய இலைகள் மட்டுமே வரும். இந்த செடியின் தண்டிலிருந்து வளரத் தொடங்கும் இரண்டு இலைகள், மிக நீளமாக வளர்ந்து கொண்டே செல்லும். இவை நீண்ட காலம் கழித்து வயதாகி உதிர்ந்ததும், மீண்டும் அதேபோல இரண்டு இலைகள் நீண்டு வளரத் தொடங்கும். இதனால் இந்த தாவரத்தின் தோற்றமே பார்ப்பதற்கு கொடூரமாக இருக்கும். உலகிலேயே அருவருப்பான தாவரம் என்றும் இதைச் சொல்கிறார்கள்.

அங்கோலா மற்றும் நமீபாவின் வறண்ட பகுதிகளில் தோன்றிய இந்தத் தாவரம், தீவிர பாலைவன நிலைகளில் உயிர் வாழும் தன்மையுடன் படைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இவை அங்கு பெய்யும் மூடு பனியிலிருந்து ஈரப்பதத்தை பிரித்தெடுத்து தனக்காக பயன்படுத்திக்கொள்ளும் அற்புத ஆற்றலைப் பெற்றுள்ளது. நீளமான இலைகள் நீர் துளிகளை சேகரித்து அதன் வேர் அமைப்புக்கு அனுப்புகிறது.

இதன் காரணமாகவே மழை இல்லாத நிலையிலும் இந்தத் தாவரத்தால் உயிர் வாழ முடிகிறது.

இதன் மற்றொரு வியக்கத்தக்க விஷயம் என்னவென்றால், அதன் நீண்ட ஆயுளாகும். இவற்றின் சில பழைய மாதிரிகளை ஆய்வு செய்து பார்த்தபோது, அவை 2000 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே இவை பூமியில் உள்ள மிகவும் பழமையான தாவரங்களில் ஒன்றாகும்.

மேலும் இந்த தாவரத்தின் வளர்ச்சியைப் பொருத்தவரை, இதன் தண்டு ஒரு ஆண்டுக்கு சில சென்டிமீட்டர் மட்டுமே வளர்கிறது.

பல கடுமையான சூழ்நிலைகளையும் தாக்குப்பிடித்து வாழ்நாள் முழுவதும் வளர்ந்து கொண்டே இருக்கிறது இந்தத் தாவரம்.









# கில்மிசாவுக்கும், அசானிக்கும் வாழ்த்துகள்!



இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 24.12.2023 அன்று வெளியிடப்பட்டது.